Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 26 (12.10.2004) செவ்வாய்க்கிழமை இதழ்: 12

# ஆழ ஊடுருவும் படையணியை கலைக்க நான் ஒன்றும் பைத்தியக்காரன் அல்ல!



## இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட கூறுகிறார்

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவின் ஒரு அங்கமாக இயங்கிவந்த ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியை அரசாங்கம் கலைத்துவிட்டதாக வெளியான செய்தியை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட மறுத்துள்ளார்.

இராணுவத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவுதினம் நேற்றுமுன்தினம் கொழும்பு இராணுவத தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தச் செய்திக்கு மறுப்புத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியைக் கலைப்பதற்கு நான் ஒன்றும் பைத்தியக்காரன் அல்ல.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய கைதாகி பிணையில் விடுவிப்பு!

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் - இராணுவ சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

இராணுவத்துக்குத் தேவையான பொருட்களை கொள்வனவுசெய்த வேளையில் இலஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு இவரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தியது.

மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களை தாக்க கண்டியில் சிங்கள இனவாதிகள் முயற்சி!

(கொழும்பு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்த பீடாதிபதி வண. சிறி. சுமங்கல தேரோவை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டியில் நேற்று பௌத்த பிக்குகள் சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களை வழிமறித்து தாக்குதல் நடத்தவும் முயற்சித்தனர்.**

மல்வத்த பீடாதிபதியுடன் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சுமார் இருபது பௌத்த பிக்குகள் நூற்றுக்கும்

அவர்களைத் தாக்க முற்பட்டதுடன் -

வாகனங்களைப் பயணம் செய்யவிடாமல் வீதியை



(கொழும்பு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்த பீடாதிபதி வண. சிறி. சுமங்கல தேரோவை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டியில் நேற்று பௌத்த பிக்குகள் சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களை வழிமறித்து தாக்குதல் நடத்தவும் முயற்சித்தனர்.**

மல்வத்த பீடாதிபதியுடன் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சுமார் இருபது பௌத்த பிக்குகள் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள இனவாதிகளும் இணைந்து - விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

சந்திப்பு முடிந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியே வந்துகொண்டிருந்தபோது - இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்கள் மற்றும் பொல்லுகளால் அவர்களைத் தாக்க முற்பட்டதுடன் -

வாகனங்களைப் பயணம் செய்யவிடாமல் வீதியை மறித்து கோஷமெழுப்பிக்கொண்டிருந்தனர். சற்றுநேரம் அப்பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டபோதும் பொலிஸார் தலையிட்டு ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பாக பயணத்தைத் தொடர்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தனர்.



# மல்வத்தை மகாநாயக்கருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்த பீடாதிபதி வண. சிறி. சுமங்கல தேரோவை நேற்று சந்தித்து சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலவரம் குறித்து பேச்சுக்களை நடத்தினர்.

இரா.சம்பந்தன் தலைமையில் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கருணா குழுவினர் மீது தாக்குதல் இருவர் பலி; ஆறு பேர் படுகாயம்!

## நாகஸ்தென்னவில் நேற்றுச் சம்பவம்

(பொலனறுவை)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைப்புறத்திலுள்ள நாகஸ்தென்னவில் பகுதியில் கருணா அணியினர் தங்கியிருந்த வீடொன்றின்மீது விடுதலைப் புலிகளின் விசேட படையணியினர் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் கருணா அணியைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

வெலிக்கந்த - கடவத்த மடுவுக்கு வடக்காக 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து

# இந்தியாவின் அரசியல் தலைவர்களுடன் ஹெல்கிசன், ரணில் பேச்சுக்கள் ஆரம்பம்!

(புதுடெல்கி)

இந்தியாவுக்கு விஜயங்களை மேற்கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் தடைப்பட்டுப்போயிருக்கும் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் தனித்தனியே பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்து தற்போது இலங்கையில் தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகள் தொடர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியுடன் நேற்று பேச்சு!



(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் காமிரே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)









இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.



EXPOAIR

Your friend in the skies...

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் - இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
ஸ்ரீகாந்த் சினேகா கபாலி மற்றும் நாகேஷ் நடித்த
போஸ் (ரீலீஸ்)



காட்சி நேரம்:11.00,3.00,7.00,10.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை



விஜய், சோனியா அகர்வால் நடித்த
மதுர
(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00,2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்
தனுஷ், சாயாசிங் நடித்த
திருடா திருடி



காட்சி நேரம்
10.30, 2.30, 6.30, 9.30
(சி-2725)

## மாணவர்களுக்கு சத்துணவு

தென்மராட்சி பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தின் ஏற்பாட்டிலான சத்துணவு வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 1 முதல் 9 வரையான மாணவர்களுக்கு காலையில் இவ்வாறு சத்துணவு வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் மேற்பார்வை செய்யவும் பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், கிராமசேவகர் உள்ளிட்ட முகாமைத்துவக் குழுஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (24)

சிறு விளம்பரம்

**முகமதி கிறைண்டிங் மில்**

ரோஸ், ரசம், நன்னாரிரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ். புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C/3022)

## இல்ல மெய் வல்லுநர் போட்டி

கரணவாய் தாமோதர வித்தியாசாலை, இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி ச. பாக்கியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதமவிருந்தினராகவும், முன்னாள் உபஅதிபர் எஸ்.ஆறுமுகம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வெளிவாரியாகப் யாழ்.மத்திய கல்லூரி மாணவராக பதிவு செய்தவர்களுக்கான பரீட்சை பற்றிய அறிவுறுத்தல் கூட்டம் நாளை 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள் வரும்பொழுது பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் க.இராசதுரை தெரிவித்தார்.

# அபிவிருத்தி திட்டம் குறித்து அரச அதிபருடன் கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா நேற்று யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற இலக்கிய விழாவில் கலந்துகொள்ளும பொருட்டு வருகை தந்த அவர் யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் சில அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் கலந்துரையாடும் பொருட்டு நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.செயலகத்துக்குச் சென்று யாழ். செயலகத்தின் பிரதம அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் சரிவர முன்னெடுக்கப்படுகின்றதா என்பது குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பரீட்சைத்திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபை

கள்ளியங்காடு பொதுச்சந்தை கட்டட தொகுதிக்கான கேள்வி கோரல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

**கள்ளியங்காடு சந்தைக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் – 2004**

மேற்படி அறிவித்தல் "நல்லூர்-செங்குந்தா பொதுச்சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2004" என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(கலாநிதி க.குணராசா),
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/3256)

பாராட்டி வாழ்த்துகிறோம்



நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த
செல்வகுமார் சத்தியலீலா தம்பதிகளின் புதல்வனும்,
யாழ். மத்திய கல்லூரி மாணவனுமாகிய
**செல்வன் செ.கஜீவன்**

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரை சித்திபெற ஊக்கமளித்த யாழ். மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அப்பா, அம்மா, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்திமார்.*

(958)

# தமிழ் இலக்கிய கலைவிழாவின் சில காட்சிகள்....



















பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# திருகோணமலையில் புலிக்கொடியை இறக்குமாறு நிர்ப்பந்தித்த பொலிஸார்!

(திருகோணமலை)

திருகோணமலையில் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை முற்பகல் 11.15 மணிக்கு அந்தப் பகுதிக்கு வந்த திருமலை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணசேகர தலைமையிலான குழுவினர் அங்கு ஏற்றப்பட்டிருந்த தமிழீழ தேசியக் கொடியை உடனடியாக இறக்குமாறு விழாக் குழுவினரைப் பணித்தனர்.

ஆனால் பொலிஸாரின் இந்தப் பணிப்பை ஏற்கமுடியாதெனவும், நிகழ்வு முடிந்த பின்னரே கொடி இறக்கப்படும் எனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால், இதனை ஏற்றுக்கொள்ளாத பொலிஸார் - தொடர்ந்தும் கொடியை இறக்குமாறு வற்புறுத்தினர். இந்த நிலையில் நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் பொலிஸாருடன் இது தொடர்பாகக் கலந்துரையாடிய போதும் அவரின் கருத்தை பொலிஸார் ஏற்க மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து, திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் அங்கு பிரசன்னமாகி நிகழ்வு நிறைவடைந்த பின்னரே கொடி இறக்கப்படும் என பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இதனை ஏற்காத பொலிஸார் குறித்த பாடசாலையின் அதிபரை அழைத்து கொடியை இறக்குமாறு வற்புறுத்தினர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது. இதனையடுத்து பொலிஸாரின் அழைப்பின்பேரில் அவ்விடத்துக்கு வந்த கண்காணிப்புக்குழுவினரும் கொடியை இறக்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால், புரிந்துணர்வு உடன்பாட்டில் புலிக்கொடி தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரும், கண்காணிப்புக் குழுவினரும் தொடர்ந்தும் அங்கு நின்றபோதும், நிகழ்வு பிற்பகல் 2.15 இற்கு நிறைவடைந்த பின்னரே கொடி இறக்கப்பட்டது.(10)

# சந்திரிகாவை பதவியில் நீடிக்க சர்வஜன வாக்கெடுப்புக்கு திட்டம்!

(கொழும்பு)



ஜனாதிபதி சந்திரிகாவை தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரமுள்ள பதவியில் வைத்திருப்பதற்கான அரசியலமைப்பு மாற்றத்தை மேற்கொள்வதற்கு விரைவில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசியலமைப்பைத் திருத்துவதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவை மூன்றாவது பதவிக்காலத்திலும் நீடிப்புச் செய்வது, அவரை தொடர்ந்தும் அரசியலில் நிறைவேற்று அதிகாரத்துடன் இருக்கக்கூடிய வகையில் பிரதமர் பதவியை உருவாக்குவது குறித்தே இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றவுடன் இதற்கான நடவடிக்கையை எடுத்த போதும் - நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாததால் இந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

தற்போது இ.தொ.காவின் ஆதரவைப் பெற்றுள்ள நிலையில் அரசாங்கம், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# 60 கட்சி முக்கியஸ்தர்களை வெளியேற்றுகிறது ஐ.தே.க!

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சுமார் 60 பேர்வரையில் அந்த கட்சியின் முக்கிய பதவிகளிலிருந்து விலக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் கட்சியின் வெற்றிக்கு பங்களிப்பு வழங்கத் தவறியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்களை கட்சி நடவடிக்கைகளிலிருந்து வெளியேற்ற கட்சியின் உயர்பீடம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதிலும் - ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக புதிய அணி ஒன்று தோற்றம் பெற்று வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கட்சி தகவல்கள் தெரிவித்தன.

ஏற்கனவே கட்சிக்குள் பல்வேறுபட்ட பிரிவுகள் தோன்றியிருப்பதாக தெரியவருகின்றது.

இந்தப் பிரிவுகள் எதிர்காலத்தில் கட்சியை பிளவுபடுத்தும் விதமாக வளர்ச்சி பெறுவதை தடுக்கும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒஸ்ரிய கல்வி நிறுவன கருத்தரங்கில் புலிகளின் அரசியற்குழு பங்கேற்பு!

(வியன்னா)

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சமாதானம் மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒஸ்ரிய கல்வி நிலையமொன்றில் நடத்திய கருத்தரங்கில் இரண்டாவது நாளாகவும் பங்குபற்றினர்.

இதில் பிரதம விருந்தினராக பேராசிரியர் ஜோகன் கல்ரவ் கலந்து கொண்டார். இவர் சர்வதேச சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக பல விருதுகளைப் பெற்றவராவார்.



கடந்த 45 வருட காலப்பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட தடவை இவர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு இலங்கையின் சமூகத் தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் பல தொடர்புகளையும் வைத்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் சமஷ்டி முறை மற்றும் முரண்பாடுகளுக்கான தீர்வு என்பது ஆராயப்பட்டது. இதில் பேராசிரியர் கல்ரவ் மிகவும் நீண்டதொரு உரையை ஆற்றினார். இவ்வேளையின் இடையில் அவர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதாகவும், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்த சு.ப. தமிழ்ச்செல்வன், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டமைக்காகவும் பேராசிரியர் கல்ரவ்விற்கு நன்றியைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் - ஐரோப்பிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பணிப்பாளர் டொக்டர் பீற்றிச் பிலிஷர், டொக்டர் வில்பிறன்ட் கிராவ், மக் குட்றன் கிராமர், அனித்தா பிலெக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# போராளியைச் சுட்டுக் கொன்றவரின் வீடு நள்ளிரவில் தீக்கிரையாக்கப்பட்டது

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை கொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளி ஜுட் எனப்படும் பாலசிங்கம் ஜெயந்நாதனின் கொலையுடன் தொடர்புடைய கருணா குழு உறுப்பினரின் வீடு கடந்த சனிக்கிழமை நள்ளிரவு பொதுமக்களால் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் - அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் இடம்பெற்றது.

போராளி ஜுட் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்ற சமயம் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வித்தகன் என்பவருடைய வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்றுமுன்தினம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு எடுத்துச்செல்லப்பட்ட போதிலும், அவரது வீட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டவில்லை.

இதேவேளை, தேசவிரோதியின் துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவைத் தழுவிய போராளி ஜுட்டின் வித்துடல், நேற்றுமுன்தினம் மாலை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

அவரது தம்பிலுவில் இல்லத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை இவரது வித்துடல் பொதுமக்களால் பொறுப்பேறகப்பட்டு, தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மாலையில் அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு மாவீரர் துயிலும் இல்லத்தில் வீரவணக்கத்துடன் விதைக்கப்பட்டது.

இதற்கிடையில் கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பிரதேசத்தில பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# முஸ்லிம் அரசியல்வாதிகளின் உதவியுடன் கருணா குழுவினர் செயற்படுகின்றனர்!

## மட்டு - அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

தமிழ்த்தேசியத்தைக் காட்டிக் கொடுத்து, தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைத்து, மழுங்கடிக்கும் செயலில் இறங்கியுள்ள தமிழ்த் தேசத்துரோகி கருணாவின் அடிவருடிகளாகிய தமிழினத் துரோகி வித்தகனால் அக்கரைப்பற்று நகரிலுள்ள பேரூந்து நிலையத்தில் வைத்து சுடப்பட்டு பார்த்தீபன் ஜுட் வீரச்சாவைத் தழுவிக கொண்டார்.

இவ்வாறு மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் - கப்டன் பார்த்தீபனின் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் சில முஸ்லிம் அரசியற் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பில் இருந்துகொண்டு, இந்த நடவடிக்கையில் கருணா குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை சமாதான விரும்பிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

அத்துடன், இந்த தேசவிரோத கும்பல்கள் எமது சகோதர சமூகத்துக்குள் முரண்பாட்டை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடி சமாதானத்தைக் குழப்ப முற்படுகின்றனர்.

எனவே நாம் அனைவரும் விழிப்பாக இருந்து, எமது தேசியத்தைக் கட்டியெழுப்பி சமாதானத்தை முன்னெடுக்க வழிசமைப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த இரு வாரங்களுக்குள்

# சமாதான ஆலோசனை சபையின்கீழ் மூன்று நிர்வாகசபைகள் அமைப்பு!

(கொழும்பு)

தேசிய சமாதான ஆலோசனை சபையின் கீழ் செயற்படும் விதத்தில் 3 நிர்வாக சபைகளை இருவார காலத்துக்குள் நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

இந்த நிர்வாகசபையில் அரசியல், மத மற்றும் பொது சமூகத்தினர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதோடு, தற்பொழுது அரசியல் நிர்வாகக்குழுவின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இணைத் தலைவர்கள் பதவியை இருவருக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்தும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு கிடைக்காமையால் பொதுத் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(தே)





நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவுதினம் கொண்டாடப்பட்டது. இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, படையினர் மத்தியில் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஷேன்வோன் உலக சாதனை படைப்பார்!



(சென்னை)

சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நாளைமறுதினம் ஆரம்பமாகவிருக்கும் இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டியில் - அவுஸ்ரேலிய அணியின் சுழற் பந்துவீச்சாளர் ஷேன் வோன், உலகின் அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரராக முரளிதரன் உள்ளார். அவர் 91 டெஸ்டில் விளையாடி 532 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

51 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட் கைப்பற்றியது அவரது சிறப்பான பந்துவீச்சு ஆகும். 13 முறை 10 விக்கெட்டுக்கு மேலும், 44 முறை 5 விக்கெட்டுக்கு மேலும் எடுத்துள்ளார்.

முரளிதரனுக்கு அடுத்தபடியாக அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்களில் 2 ஆவது இடத்தில் இருப்பவர் வோன். அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அவர் 113 டெஸ்டில் விளையாடி 531 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். 71 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதே அவரது சிறந்த பந்துவீச்சு ஆகும். 8 முறை 10 விக்கெட்டுக்கு மேலும், 27 முறை 5 விக்கெட்டுக்கு மேலும் எடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் முரளிதரன் சாதனையை ஷேன் வோன் முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நடைபெறவில்லை.

பெங்களூர் டெஸ்டில் கடைசி நாளில் அவர் விக்கெட்டுக்களைக் கைப்பற்றவில்லை. இதில் அவர் 4 விக்கெட்டுக்களையே எடுத்தார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இந்த டெஸ்டில் வோன் உலக சாதனை படைப்பார். முரளிதரன் சாதனையை முறியடிக்க அவருக்கு இன்னும் இரண்டு விக்கெட்டுக்கள்தான் இருக்கிறது. ஒரு விக்கெட் எடுத்தால் சாதனையைச் சமன் செய்வார்.

இதனால், சென்னை மைதானம் வோன் மறக்கமுடியாததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய அணி மீண்டுவர இன்னமும் வாய்ப்புள்ளதாம்

## தோல்வியின் பின் கங்கூலி கருத்து



(பெங்களூர்)

நம்பிக்கையான ஆட்டக்காரர்கள் பலர் இந்திய அணியில் இருந்த போதும் அவுஸ்ரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர்களின் ஆட்டம் எடுபடாமல் போனது துரதிஷ்டமே என்று இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவித்தார்.

பெங்களூர் டெஸ்ட் போட்டி முடிந்தபின்னர் கங்கூலி நிருபர்களிடம் கூறுகையில் -

டெண்டுல்கர் நல்லமுறையில் குணமடைந்துவிட்டார். சென்னைப் போட்டிக்காக அவர் பயிற்சி செய்யக் காத்திருக்கிறார். அவரின் வருகை இந்திய அணிக்குப் புதிய தெம்பளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் துடுப்பாட்டம் மிக மோசமாக இருந்தது. நம்பிக்கையான ஆட்டக்காரர்கள் பலரும் இந்திய அணியில் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் ஆட்டம் எடுபடாமல் போனது துரதிஷ்டம்.

இந்தத் தொடரில் இன்னும் 3 டெஸ்ட் போட்டிகள் எஞ்சியிருக்கின்றன. எனவே, இந்திய அணிக்கு மீண்டுவர நல்ல வாய்ப்பு இருக்கிறது என்றார்.

# சென்னை டெஸ்ட் போட்டியிலும் டெண்டுல்கர் ஆடுவது சந்தேகமே!



டெனிஸ் - எல்போ நோயினால் பாதிக்கப்பட்டு, கடந்த பல மாதங்களாகச் சிகிச்சை பெற்றுவரும் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், நாளை மறுதினம் சென்னையில் ஆரம்பமாக இருக்கும் டெஸ்ட் போட்டியிலும் ஆடுவாரா என்பது சந்தேகமே எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயம் காரணமாக ஹொலன்டில் நடந்த 3 நாடுகள் போட்டி, இங்கிலாந்து தொடர் மற்றும் ஐ.சி.சி. சம்பியன் ட்ராபி போட்டி என்பவற்றில் டெண்டுல்கர் ஆடவில்லை. காயத்தில் இருந்து முற்றிலும் குணமடையாததால் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த முதலாவது டெஸ்டிலும் இவர் விளையாடவில்லை.

இந்த நிலையில் வரும் 14 - 18 ஆம் திகதி வரை சென்னையில் நடைபெறும் 2 ஆவது டெஸ்டிலும் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என்றே தெரிகிறது.

பெங்களூரைச் சேர்ந்த பிரபல எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரேம்சந் அவரைப் பரிசோதித்தார். சென்னை டெஸ்டில் டெண்டுல்கர் விளையாடுவதற்கான வாய்ப்பு 50 சதவீதம்தான் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக டெண்டுல்கர் கூறும்போது -

இதுவரை நான் பயிற்சி பெறவில்லை. துடுப்பாட்டப்பயிற்சி பெறும்போது வலி இருக்கும் என்று டாக்டர் கூறியுள்ளார். அவரது ஆலோசனைப்படி நடப்பேன் என்றார்.

நாக்பூரில் வரும் 26 - 30 ஆம் திகதிவரை நடைபெறும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் ஆடுவார் என்று தெரிகிறது. இதற்கிடையே அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடர் முழுவதும் அவர் ஆடமாட்டார் என்று மற்றொரு தகவல் கூறுகிறது.

டெண்டுல்கர் ஆடாததால் இந்திய அணி துடுப்பாட்டத்தில் பல வீனமடைந்து காணப்படுகிறது. மத்திய தர வரிசை ஆட்டம் கண்டுள்ளது. ஏற்கனவே மோசமாக ஆடிவரும் இந்தியத் துடுப்பாட்டவீரர் கூடுதல் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் 9 470 ஓட்டங்களும், 33 சதமும் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - சிம்பாப்வே போட்டி மழையால் கைவிடப்பட்டது!

(ராவல்பிண்டி)

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் பாக்ரெல் தொடரில் நேற்று நடைபெறவிருந்த இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

ராவல்பிண்டி நகரில் நேற்று இந்தப் போட்டி நடைபெறவிருந்த போதும், தொடர்ந்து அங்கு மழை பெய்துகொண்டிருந்ததால், நடுவர்கள் சைமன் ரபேல் மற்றும் அலீம்டர் ஆகியோர் கூடிப் போட்டியை நடத்த வாய்ப்பில்லை என்று முடிவெடுத்தனர்.

## ஹொக்கி டெஸ்ட் தொடர்

# பாகிஸ்தானுடனான போட்டியில் இந்தியாவுக்கு ஆறுதல் வெற்றி!

(ஹைதராபாத்)

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசிப் ஹொக்கிப் போட்டியில் இந்தியா ஆறுதல் வெற்றிபெற்றது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் 8 போட்டிகள் கொண்ட ஹொக்கி டெஸ்ட் தொடரில் மோதின. 7 போட்டிகள் முடிவில் பாகிஸ்தான் 4:1 என்ற புள்ளியில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த நிலையில் 8 ஆவது மற்றும் கடைசி ஆட்டம் ஹைதராபாத்தில் நடந்தது. மின்னொளியில் நடந்த இந்தப் போட்டியில் இந்தியா தொடக்கம் முதல் விறுவிறுப்புடன் ஆடியது.

இந்தப் போட்டியில் ஆறுதல் பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்த இந்தியா 2 கோல்கள் போட்டு வெற்றிபெற்றது. இந்திய அணி சார்பாக துஷார் கண்டேகர் மற்றும் சந்தீப் மைக்கேல் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

இந்த ஆட்டத்தில் இந்திய அணிக்கு மேலும் சில கோல் வாய்ப்புக்கள் கிடைத்தன. ஆனால், சரியான ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தால் இந்தியாவின் கோல் எண்ணிக்கை குறைந்தது.

இந்த ஆட்டத்தின் கடைசிவரை ஆறுதல் கோல் போட பாகிஸ்தான் முயற்சி மேற்கொண்டும் பலன் கிடைக்கவில்லை.

ஒலிம்பிக் விளையாட்டில் 7 ஆவது இடம் பிடித்தபோதும், பாகிஸ்தானில் நடக்கவுள்ள சம்பியன் கிண்ணப் போட்டியில் ஆட இந்தியாவுக்கு கடைசி நேரத்தில் வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.



# படங்களும் தகவலும்



உலக நீச்சல் சம்பியன் ஷிப் போட்டிகளில் 200 மீற்றர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய வீரர் யூறாக் ஹசன் போட்டியின் Back Stroke பகுதியை நிறைவு செய்யும் காட்சி.



உலக நீச்சல் சம்பியன் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் இயன் குறொக்கர் - ஆண்கள் 50 மீற்றர் ButterFly நீச்சல் போட்டியில் உலக சாதனை நேரமான 22.71 செக்கனைப் பூர்த்திசெய்து தங்கம் வென்றார்.

# நடுவர்களின் தீர்ப்புக்களை குறைசொல்லவேண்டாம்!

## அறிவுரை கூறுகிறார் கில்கிறிஸ்ட்



(பெங்களூர்)

நடுவர்களைக் குறை சொல்ல வேண்டாம் என்று அவுஸ்ரேலிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் - இந்தியா 217 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்த டெஸ்டில் நடுவர் கூறிய சில தீர்ப்புக்கள் சர்ச்சையை ஏற்படுத்தின.

2 ஆவது இனிங்ஸில் ஷேவாக் பந்தை எதிர்கொண்டபோது மட்டையில்பட்ட பின்னர்தான் பந்து காலில் பட்டது. இதனைக் கவனிக்காமல் நியூஸிலாந்து நடுவர் பில்போடன் எல்.பி.டபிள்யூ கொடுத்தார். இதே போல பதானுக்கு முதல் இனிங்ஸில் கொடுத்த அவுட்டும் தவறாக இருந்தது.

இது குறித்து அணித்தலைவர் கங்கூலி கூறும்போது - தொலைக்காட்சி ரீ பிளேயில் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், தோல்விக்காக நடுவர்களைக் குறை சொல்லவேண்டாம் என்று அவுஸ்ரேலிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

நடுவர் பணி மிகவும் சிரமமானது. இந்திய அணி கடினமான முடிவுகளை எதிர்கொண்டது.

ஆனால், சந்தேகத்தின் பலன் அடிப்படையில்தான் நடுவர்கள் அது மாதிரியான முடிவை மேற்கொண்டார்கள். இதற்காக அவர்களைக் குற்றஞ்சாட்டவேண்டாம்.

2001 ஆம் ஆண்டு நாங்கள் இந்தியா வந்தபோது இதுமாதிரி சில தவறான முடிவுகள் வழங்கப்பட்டன. எனவே இவ்வாறான தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என கில்கிறிஸ்ட் கூறினார்.

# யாழ். கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ். வலயத்துக்குட்பட்ட யாழ். கோட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிக் கட்டப் போட்டிகள் இன்று கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் பிற்பகல் 1.30 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 5 போட்டிகள் நடைபெறவுள்ளன.

14 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்திற்கான போட்டியில் - சென். சாள்ஸ் மகா வித்தியாலயம் எதிர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயமும்.

14 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் - நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் எதிர் யாழ். மத்திய கல்லூரியும்,

18 வயதுப் பிரிவில் - சென் சாள்ஸ் மகா வித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க.வித்தியாலயமும்,

18 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும்

16 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் மோதவுள்ளன. (58)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ். சிறைச்சாலையில் பாரிய இடப் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் பாரிய இடப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக யாழ். குடா நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித் துக் காணப்படுகின்றன.

இங்கு கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு போன்ற செயல்களில் ஈடுபடுவோர் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவற்றை விட தற்போது கசிப்பு காய்ச்சல், சட்ட விரோதமாக சாரா யம் விற்றல், கஞ்சா வைத்திருத்தல் போன்றவையும் - முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் இந்தக் குற்றச்சாட்டுக் களில் ஈடுபடுபவர்களைத் தடுத்து வைப்பதற்குப் போதிய இட வசதி இன்மையால், இங்கு தடுத்து வைக் கப்பட்டுள்ள கைதிகள் பல அசௌ கரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, நாளுக்கு நாள் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளின் தொகை அதிகரிப்ப தால், வேறு வசதியான இடம் ஒன்று உடனடியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

சிறைச்சாலை வளாகத்தை ஏற் கனவே வேறு இடத்துக்கு மாற்றி அமைக்க வசதி செய்து தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல ரும், அரசியல் வாதிகளும் உறுதி வழங்கியுள்ள போதிலும், அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்ப டாமை குறித்து - சிறைச்சாலை அலு வலர்கள் விசனமடைந்திருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.



பருத்தித்துறை நகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வினோத உடை நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களைப் படத்தில் காணலாம். (12)

# திருநெல்வேலிச் சந்தையில் நிலவும் பாரிய இடநெருக்கடி

திருநெல்வேலி சந்திப்பகுதியில் காலையில் சந்தைகூடும் வேளை யில், சன நெருக்கம் காரண மாக வீதிப் போக்குவரத்துக்கள் நடைபெறு வதில் சிரமமேற்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தைப் பகுதி யின் முன் - எப்போதுமில்லாத வகை யில் அண்மைக் காலமாக நுகர் வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தச் சந்தைக்கு வருகின்ற வியாபாரிகள், பொதுமக்களின் தொகை கேற்ப வகையில் - சந்தை கட்டட மானது அமையவில்லை என்பது இந் நெருக்கடிக்கு ஒரு காரணமாக அமைவதோடு, சந்தைக்கு வருபவர் கள் தமது வாகனங்களை வீதியின் இருமருங்கும் நிறுத்தி வைப்பதால், மிகுந்த இட நெருக்கடி ஏற்படுவதோடு, இந்நிலைகளால் போக்குவரத்துச் செய்வதிலும் பலத்த சிரமம் ஏற்படுவ தாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

காலை வேளைகளில் பாடசாலைக் குச் செல்லும் மாணவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நல் லூர் பிரதேச செயலரிடம் கேட்ட போது, சந்தைத் தொகுதியை பெரி தாக்குவதன் மூலம் இந்தப் பிரச்சினை யைத் தீர்க்க முடியும் எனவும், இதற் காக தாம் வேறு காணியொன்றைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும், விரைவில் இடநெருக்கடியைத் தீர்க்க தாம் ஆவன செய்வதாகவும் தெரி வித்தார்.

## நவராத்திரியை முன்னிட்டு அன்பளிப்புகள்

நாளை மறுதினம் ஆரம்பமாக வுள்ள நவராத்திரி பூசையை முன் னிட்டு, சரஸ்வதிதேவியின் மூவா ணப்படமும், விஜயதசமி அன்று ஏடு தொடக்கவுள்ள சகல பாடசாலை ளுக்கும், சனசமூக நிலையங்களுக் கும், இந்து இளைஞர் மன்றங்களுக் கும் பனை ஓலை ஏடுகளை கே.கே. எஸ்.வீதியிலுள்ள மில்க்வைற் சோப் தொழிலகத்தில் அன்பளிப்பாகக் வழங்கவுள்ளனர்.

தேவையானவரைத் தொடர்பு கொள்ளுமாறு தொழிலதிபர் இ.தவ கோபால் அறிவித்துள்ளார்.



பருத்தித்துறை வை.எம்.சி.ஏயால் துன்னாலை வை.எம்.சி.ஏ. கட்ட டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களின் இளைப்பாற்ற மண்டபத்தை மனித உரிமைகளுக்கான பிளவுசன் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (14)

## சின்னஞ் சிறு செய்திகள்

### தங்கப்பதக்கம் பெற்ற வீராங்கனைக்கு பாராட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத்திலான குண்டெறி தல் போட்டியில், தங்கப் பதக்கத்தை வென்ற யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி கு.தர் சினியைப் பாராட்டும் வைபவம் இன்று பிறபகல் 12.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வி.மாணிக் கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பாராட்டு வைபவத்தில் - நல்லூர் கோட்டக் கல்விப் பணிப் பாளர் திருமதி எஸ்.காங்கேயன், பழைய மாணவர் சங்கத் தலைவர் கிவி.கே.சிவஞானம், உடற்கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் த.அருண கிரிராஜா, யாழ். மாவட்ட அரசியந் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கலாநிதி எஸ்.மோக னதாஸ், அரச அதிபர் செ.பத்ம நாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து பயிற்றுனர்கள், பெற் றோர், வீராங்கனை ஆகியோர் கௌரவிக்கப்படுவர்.

### கோண்டாவில் பகுதியில் திருடர் கைவரிசை

(கோண்டாவில்)

கோண்டாவில் குமரகோட்டம் பகுதி யிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் - அங்கு தமது கைவரி சையைக் காட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நவரட்ணம் சுரேஸ் என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றது. நள்ளிரவுவேளை யில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் - வீட்டிலுள்ளோர் உறங்கிக் கொண் டிருந்தவேளை, அங்குள்ள பொருட் களுள் - கைத் தொலைபேசிகள் இரண்டும், வெளிநாட்டு பாஸ்போட் மற்றும் சூட்கேஸில் உள்ள உடுப் புக்கள் சிறுதொகைப் பணம் மற் றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான பொருடகளைத் திருடியுள்ள னர். (82)

### வல்லை வீதியிலிருந்த காவலரண் அகற்றப்பட்டது

வல்லைப் பாலத்தில் போக்குவரத் துக்கு இடையூறாக அமைந்திருந்த இராணுவக்காவலரண் கடந்த 3 ஆம் திகதி முதல் அகற்றப்பட்டுள்ளது. மிக நீண்டகாலமாக வல்லைப் பாலத தின் மையப் பிரதேசத்தில் இந்தக் காவலரண் அமைக்கப்பட்டிருந் தது.

தற்போது வல்லைப் பாலத்தை அகலமாக்கும் பணிகள் - வீதி அபி விருத்தி அதிகார சபையால் மேற் கொள்ளப்பட்டு வருவதாலேயே இந்தக் காவலரண் அகற்றப்பட்டுள் ளது.

இவ்வாறு வல்லைப் பாலத்தின் மையப் பகுதியில் காவலரண அமைந் திருந்தால், கடந்த காலங்களில் பல வாகன விபத்துக்கள் ஏற்பட் டமை குறிப்பிடத்தக்கது. (14)

## குழு மோதல்

சுழிபுரம் பகுதியில் இரு குழுக்க ளுக்கிடையே இடம்பெற்ற மோதலில் 7 பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சுழிபுரம் பிரதேசத்தில் வசிக்கும் இருவேறு குழுக்கள் கடந்த சனிக் கிழமை முதல் தமக்குள் மோதிக் கொண்டன. (207)

## யாழ். செயலகத்தின் நடமாடும் சேவை

ஜே/68 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு மக்க ளுக்கு -பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளுக் கான நடமாடும் சேவையொன்று, எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு றெக்கிள மேசன் கிழக்கில் அமைந்துள்ள தொடர்மாடி சனசமூக நிலைய மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வச முள்ள ஆவணங்களுடன் சமூக மளித்து, இந்தச் செயன்முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிர தேச செயலாளர் கேட்டுக்கொண் டுள்ளார்.

ஆவணங்கள் இல்லாதவர்க ளுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டைகளைக் கொண்டு வந்தால் கருமங்களை இலகுவாக்கலாம் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலி நகர்ப்பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதி யில் மாலை வேளையில் ஒன்று கூடும் இளைஞர் கோஷ்டியினர் - பல தகாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் வழக்கமாக மாலை 6 மணிக்குப் பின் ஒன்று கூடும் இளைஞர்கள் - பஸ் நிலையத் தின் கிழக்குப் பகுதியில் முன்பு இராணுவத்தினரால் பயன்படுத்தப் பட்டு, கைவிடப்பட்ட மறைவிடத்துக் குள் சென்று மதுபானங்களைத் தாரா ளமாக அருந்திய பின் - தமது கைவரிசைகளைக் காட்டுகின்றனர்.

இவர்கள் மாலை நேரங்களில் இந்த வீதியால் சென்று வரும் யுவதி களுடன் தகாத வார்த்தைகளில் தர்க கம் புரிகின்றனர்.

அத்துடன், இந்தப் பகுதியில் காணப்படும் வியாபார நிறுவனங்க ளின் பொருட்களை உடைத்துச சேதப படுத்துதல் மற்றும் சண்டையிடுதல் போன்ற மிக மோசமான செயற்பாடுக ளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம் மந்தப்பட்ட தரப்பினர்களிடம் முறைப் பாடு செய்வதற்குச் செல்வோரும், இந்தக் கோஷ்டியால் எச்சரிக்கை செய் யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகி றது.

இதில் சம்மந்தப்பட்டுள்ள பல இளைஞர்கள் - ஏற்கனவே பல தட வைகள் விடுதலைப் புலிகளின் அர சியல் துறையினராலும், பொலிஸாரா லும் எச்சரிக்கை செய்யப்பட்டிருப் பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பலர் யாழ்.மாவட்டத் தின் பிரபலமான பாடசாலைகளின் பழைய மாணவர்கள் என்பதும் குறிப் பிடத்தக்கது.

## பண்ணிசைப் போட்டி

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ் வார் சுவாமி கோயில் மஹோற் சவத்தை முன்னிட்டு, யாழ். மாவட்ட பாடசாலை ரீதியில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் வருமாறு -

**கீழ்பிரிவு -**

க.ஜெனீத்தா (வட இந்து மகளிர் கல்லூரி), த.தர்சிகா (வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை), ரா.சர்ஜனா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**மத்திய பிரிவு**

கோ.நந்தபாலன் (வட இந்து மகளிர் கல்லூரி), சி.சபரிபிரியதர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வே.அபிரா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**மேற் பிரிவு**

ச.கேதீஸ்வரி (தும்பளை சிவப் பிரகாச மகா வித்தியாலயம்), பா.தர் மினி (வட இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீ.விஜிதா (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்).

**அதி மேற்பிரிவு**

இ.சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), செ.மயூரி, பா.சுபா (வட இந்து மகளிர் கல்லூரி), சு.சகிகுமார் (ஹாட்லிக் கல்லூரி). (20)

## கைதடி பாலம் திருத்தப்படுவதால்

# கனரக வாகனங்களின் பாதையை மாற்றுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

ஏ-9 வீதியில் கைதடிப்பகுதியில் அமைந்துள்ள பாலத்தைத் திருத் துவதற்கு, வசதியாக அதன் அரு காமையில் அமைக்கப்பட்டுள்ள தற் காலிக மண்பாதையால் கனரக வாக னங்கள் பிரயாணஞ் செய்வது ஆபத தானதாக அமைந்துள்ளது.

பயணிகளை ஏற்றிவந்த வடபிராந திய போக்குவரத்துச்சபை பஸ் புதை யுண்டபோதும், பயணிகள் தெய்வா தீனமாகத் தப்பினர். இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

மழை காலத்தைக் கருத்திற் கொண்டு, இந்த வீதியூடாகச் செல் லும் கனரக வாகனங்களை தடை செய்து, பாலம் திருத்தப்படும்வரை கொடிகாமம் - பருத்தித்துறை வீதிய, டாகப் பயணஞ் செய்வதற்குரிய மாற்று ஒழுங்குகளைச் செய்யுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் யாழ். அரச அதிபரைக் கடிதம் மூலம் கோரி யுள்ளார்.

கைதடியில் அமைந்துள்ள தற் காலிக பாதை - மிகவும் அகலங் குறைந்ததாகவும், பாதுகாப்புக் குறைந் ததாகவும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

மழைகாலம் ஆரம்பமாகவுள்ள தால், உணவு மற்றும் அத்தியாவசி யப் பொருட்களை ஏற்றிவரும் கன ரக வாகனங்களும் பயணிகளை ஏற்றி யிறக்கும் பேருந்துகளும் இந்த வீதி யூடாகப் பயணம் செய்வதால் உணவு விநியோகமும் பாதிக்கப்படும் அபாய நிலை உருவாகின்றது. (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : தே.பேடினன் லின்ஸ்லோ
முகவரி : 70, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------------
முகவரி :----------------------------
பிறந்த ஆண்டு:----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------
பெற்றோர் ஒப்பம்




# புதிய விண்வெளி விமானம்

அமெரிக்க நாட்டால் விண்வெளி ஆராய்ச்சிக்கென புதிய வகை விமானம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது ஏறக்குறைய 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்ததாக உள்ளது. இது வானில் அதிகளவு உயரத்துக்கு பறக்கக் கூடியதாகும். அத்துடன் ஆராய்ச்சிகளைச் செய்துவிட்டு, உடனடியாக தரையிறங்கக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பயணம் செய்பவர்கள் விண்வெளி ஓடங்களில் பயணம் செய்பவர்களைப்போன்றே உடைகளை அணிந்திருக்கிறார்கள்.





ஆனால், விண்வெளி ஓடங்களைப்போல் இது வேற்றுக் கிரகங்களில் தரையிறங்காது. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வுகூடம் இதை உருவாக்கியது.

1976 ஆம் ஆண்டளவில் இப்படியான முயற்சிகள் தோன்றின. ஆனாலும், அவை பெரியளவில் வெற்றியைத் தரவில்லை.

இந்த விமானம் தற்போது அமெரிக்காவில் வான் மற்றும் விண்வெளி ஆய்வுப் பொருட் காட்சிசாலையில் - மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதில் ஐந்து விண்வெளிப் பயணிகள் வரையில் பயணம் செய்யலாம் எனவும் கூறப்படுகிறது.

# மிருக நோய் ஆய்வுகூடம்



சிறிய சிறிய ஆய்வுகூடங்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்காக மட்டுமல்ல, மனித மற்றும் மிருகங்களுக்கான நோய்க் காரணிகளை கண்டுபிடிக்கக்கூடிய தேவைக்காகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுதும் மிருகங்களின் மூலமே மனிதனுக்கு நோய்கள் பரவுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஒவ்வொரு மிருகப் பண்ணையிலும் ஒரு சிறிய ஆய்வுகூடம் ஒன்று மிருகங்களுக்கு ஏற்படுகின்ற நோய்களைக் கண்டுபிடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. 2001 ஆம் ஆண்டளவில் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட பெரிய அளவிலான மிருகநோய்கள் எத்தனையோ பண்ணைகளை இல்லாதொழித்திருக்கின்றன. அதன் பிறகு நோய்களைச் சாதாரணமாக விடாது. உடனடியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய நிலைக்கு பண்ணையாளர்கள் தள்ளப்பட்டனர். தற்போது மிருகங்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகூட சுத்திகரிக்கப்பட்டே வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சுத்திகரிப்பு இயந்திரம் ஏறக்குறைய 40 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ்களைக் கொண்டது. ஒவ்வொரு பண்ணைகளிலும் அரசாங்க சுகாதார துறையினரால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. இதனால், மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களின் தாக்குதிறன் முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் எல்லா நாடுகளிலும் மிருகநோய்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதற்காக மிருக வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

# அழியும் சிறுத்தைப் புலி

ஆசிய நாடுகளில் சீனாவிலும், இந்தியாவிலும்தான் கூடியளவு புலிகள் வேட்டையாடப்படுகின்றன என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்தியாவில் வேட்டையாடப்படுகின்ற சிறுத்தைப் புலிகள் அவற்றின் தோல்கள், பற்கள், நகங்களுக்காகவும் நேபாளம் மற்றும் திபெத் நாட்டுக்குக் கடத்தப்படுகிறது.



ஏறக்குறைய 100 ஆயிரம் சிறுத்தைப் புலிகள் ஆசியக் காடுகளில் காணப்பட்டன. ஆனாலும், தற்போது 5000 இற்கும் குறைவானவை மட்டுமே ஆசியாவில் வசிப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் சீனப் பொலிஸாரால் 31 புலித் தோல்கள் - சீன திபெத் எல்லையில் வைத்து மடக்கப்பட்டது. ஏறக்குறைய கடந்த ஆண்டில் மட்டும் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு புலி மற்றும் சிறுத்தை தோல்கள் விற்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. புலி - சிறுத்தை ஆகியவற்றை நினைக்கும்போது - சீனா - இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளே நினைவுக்கு வருகிறன. ஏறக்குறைய 166 நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து இப்படியான சட்டபூர்வமற்ற கடத்தல் முயற்சியை எதிர்ப்பதாக கையொப்பமிட்டிருக்கின்றன. இதன்மூலம் சிறுத்தைப் புலிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

# புதிய வண்ணத்துப் பூச்சி

தற்போது அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் புதிய வகைப் பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தினுடைய ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பறவைகளை பயங்கரமான வண்ணத்துப் பூச்சிகள் என அழைக்கிறார்கள். இவை ஆசிய நாட்டுக்குரிய இனங்கள் எனவும், ஆனால், வட அமெரிக்காவில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வண்ணத்துப் பூச்சிகள் வாழ்ந்தன எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. கடந்த 19 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் இவை மீண்டும் அடையாளங் காணப்பட்டன. விஞ்ஞானிகளின் கருத்துப்படி இவை மிகவும் பயங்கரமானவை. இவை பலதரப்பட்ட வர்ணங்கள் மற்றும் வடிவங்களுடன் காணப்படுகின்றன. ஒன்று ஐரோப்பாவின் எஸ் எக்ஸ் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனுடைய நிறம் கறுப்பு மற்றும் சிவப்பு பொட்டுக்கள் ஆகும். அவை அதிகளவு பெருகாததற்குக் காரணம் இவற்றுக்கு ஏற்படுகின்ற உணவுப் பற்றாக்குறை ஆகும். இவை பழச்சாறுகள், பழங்கள் ஆகியவற்றை விரும்பி உண்ணுகின்றன. சிலவேளைகளில் பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் ஹொலன்ட் ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றன.



# விஞ்ஞான ஊசி மருந்து

ஊசிமருந்துகளை மக்கள் அதிகம் விரும்புகிறார்கள். தற்போது ஊசிமருந்துகள் ஏற்றிவிட்டு அவை எவ்வாறு உடலில் செல்கின்றன என்பதைச் செந் நிறக்கதிர்கள் கொண்ட கமராக்கள் மூலம் பார்க்க முடியும் என வைத்தியர்கள் கூறுகிறார்கள். நவீன தொழில் நுட்பத் திறன்கள் வளர்ச்சியடைந்த இந்தக் கால கட்டத்தில் இப்படியான முறைகள் அவ்வளவு ஆச்சரியத்தை தரவில்லையென விஞ்ஞான ஆய்வு மையங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.



மனித உடலில் காணப்படுகின்ற தோல் ஏறக்குறைய 740 நனோ மீற்றர் தடிப்புள்ளது. அதனூடாக ஊசி மருந்து ஏற்றப்பட்டு, அது சரியான முறையில் உடல்வழியே செல்கிறதா என்பது சாதாரண முறையில் தெரியாது. சில சந்தர்ப்பங்களில் ஊசி சரியான நாளங்களில் ஏற்றப்படுவதில்லை. தசைகூடிய சிறு குழந்தைகளில் ஊசி ஏற்றப்படும் பொழுது, அவை விளைவு காட்டுவதில்லை. இதற்குக் காரணம் அங்கே நாளத்தில் ஊசி ஏற்றப்படுவதில்லை. என்பதாகும். செந்நிறக்கதிர்கள் ஊசிமருந்து ஏற்றப்படுவதை உறுதி செய்கின்றன. இதன் மூலம் ஊசி மருந்து உடல் முழுவதிலும் பரவுகிறதா என்பதை உறுதிசெய்யக்கூடியதாக இருக்கிறது.

# நோர்வே நாட்டில் பெருகிவரும் உல்லாசப்பயணிகள்

விடுமுறை காலங்களை இன்பமாகச் செலவழிக்க விரும்புபவர்களுக்கு நோர்வே நாடு மிகச் சிறந்த இடங்களை வழங்குகின்றது. அங்கே வருகின்ற உல்லாசப் பிரயாணிகள் கூடுதலாகப் பெறுதற்கரிய விலங்குகளை வேட்டையாடத் துடிக்கிறார்கள்.



ஆனால், அங்கே மிருகங்களை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக கூடுதலான அளவு உல்லாசப் பிரயாணிகள் நோர்வே நாட்டுக்கு உல்லாசப் பயணம் போவதைத் தவிர்த்திருந்தார்கள். தற்போது நோர்வே கொடுத்த சில அரிய சுற்றுலாப் பிரயாண மையங்கள் மற்றும் புராதன இடங்கள் ஆகியவற்றால் கவரப்பட்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் இப்படியான இடங்களில் அகதிகள் மற்றும் பழங்குடியினர் வாழ்ந்து வந்தார்கள். அத்துடன், சில இடங்களில் மக்கள் புகமுடியாத சில அம்சங்கள் மற்றும் கதிர்த் தொழிற்பாட்டு விளைவுகள் இருந்தன. இவை தற்போது, களையப்பட்டு, உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடியவாறு உருவாக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் மிக முக்கியமாக நோர்வே நாடு கடல் வாழ் உயிரின வேட்டையில் பிரசித்தி பெற்றது. கடந்த காலத்தில் தடைசெய்யப்பட்ட இந்தவேட்டை நோர்வே அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவும் நோர்வே நாட்டில் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

## திரை விமர்சனம்

# கஜேந்திரா

தெலுங்கில் எடுக்கப்பட்ட 'சிம்மாத்ரி' படத்தின் தமிழ் வடிவம் "கஜேந்திரா"



பெரிய பண்ணையாராகிய சரத்பாபுவின் ஊழியன் விஜயகாந். இவர் புத்தி சுவாதீனமில்லாத லயாவை அடிக்கடி சென்று பார்த்து வருகிறார். லயா சரத்பாபுவின் மாப்பிள்ளை நிழல்கள்ரவியின் மகள். ப்ளோரா விஜயகாந்தைக் காதலிக்கின்றார். இதனால், சரத்பாபு நிழல்கள் ரவியிடம் பெண் கேட்கிறார். இங்கே அந்தஸ்துப் பிரச்சினை தோன்றி, சரத்பாபு விஜயகாந்தைத் தனது சுவீகாரமகளாக ஏற்பதற்கு முடிவு செய்கிறார். இதற்கிடையில் நிழல்கள்ரவி அவரது தந்தை வினுச்சக்கரவர்த்தி ஆகிய இருவரும் சேர்ந்து, விஜயகாந்துடன் லயாவைக் கொச்சைப்படுத்துகிறார்கள். ஒருகட்டத்தில் விஜயகாந் 'வீட்டை விட்டு வெளியேறுகிறார். ஒரு மோதலில் விஜயகாந்துக்கு எதிர்பாராத விதமாக ராதாரவி ஒரு படையுடன் வந்து உதவுகின்றார். இதன்போது தலையில் அடிபட்டு லயாவுக்கு புத்தி தெளிகிறது. அவர் விஜயகாந்தைக் குத்திவிடுகிறார்.

விஜயகாந் சரத்பாபுவின் மகள் சீதாவை அவருடைய தந்தையுடன் சேர்த்து வைக்க முயற்சி செய்கிறார். இதன்போதுதான் லயா அவர்களுடைய மகள் என்பதையும் உணர்கிறார்.

ஒருகட்டத்தில் ராணா என்கின்ற தாதாவால் சீதா கொல்லப்படுகின்றார். ராணாவை எப்படி பழிவாங்குகிறார் என்பது மீதிக்கதை.

படம் முழுக்க ஒரே வெட்டுக்குத்து. அரசியல் ரெடி மிகுந்த லியாகத் அலிகானின் வசனங்கள் ஒளிப்பதிவாளர் பிரதாப் மற்றும் சண்டைக் காட்சிகளுக்குப் பொறுப்பான ராக்கிராஜேஷ் ஆகியோரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தேவாவின் இசையில் பாடல்கள் மனதில் நிற்கும்படியாக இல்லை.

விஜயகாந்துடன் கூடவே ரமேஷ் கண்ணாவும் வருகிறார். இயக்குநர் சுரேஷ் கண்ணா இந்த முறை திரைக்கதை வசனம் ஒன்றையும் நம்பாமல் தனியே சண்டையை மட்டும் நம்பியிருக்கிறார்.

"கஜேந்திரா" இரத்தக்களரி.

சு. தர்ஷி.

# இசைக்கோலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

முழு உலகமும் இசைக்கு அடிமையாகியுள்ள இந்த நேரத்தில், நாளாந்தம் புதிய புதிய இசைக்கோலங்கள் உலகில் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இசைக்கருவிகள் என்றால் என்ன? இசையமைப்பு என்றால் என்ன? உலகில் முன்னணி வகிக்கின்ற நாடு - அமெரிக்க ஐக்கிய நாடு ஆகும். இன்ரநெட் மூலம் பல இசைக்கோலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஆனால், கட்டணம் இல்லாமலே களவாகப் பாடல்கள் கேட்பதற்குரிய கணினி மென்பொருளும் அமெரிக்க சந்தையில் காணப்படுகிறது. இதனால் இசையமைத்து அல்பங்களை வெளியிடுகின்ற இன்ரநெட் நிறுவனங்களுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, டென்மார்க், ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் மிகவும் பேர்போன இசைகோலங்ளை வெளியிடும் நாடுகளாக இருக்கின்றன. சில அமெரிக்க ஒலிப்பதிவுக் கம்பனிகள் இப்படியான சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றம் சென்றிருக்கின்றன. இதன் காரணமாக பல கணினி நிறுவனங்கள் சந்தேகத்தின் நிமித்தம் நீதிமன்றங்களால் முடக்கப்படவிருக்கின்றன. அதேவேளை சில கணினி மென்பொருட்களாகிய காசா, குறொக்ட்டர், ஈமெஸ் பியர்சா வின் எம் எக்ஸ் ஆகியனவும் நீதிமன்றத்தால் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன.



# மீன் பிடிக்கு புதிய சட்டம்



ஆழ்கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்கள் - தற்பொழுது சிலவகை கடல் உயிரினங்களைப் பிடிபபதைத் தடைசெய்திருக்கின்றார்கள். அதிலும் செம்மஞ்சள் நிறமுடைய அரிதான மீனினங்கள் கடுமையான முறையில் தடைசெய்யப்பட்டுள்ளது. உண்மையில் இந்த மீன்கள் 8500 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. அத்துடன், இவை கூடுதலாக குளிர் நீரிலேயே அதிகம் வாழ்கின்றன. இது காணப்படுகின்ற நாட்டில் கடற்பிரதேசங்களில் அதாவது நோர்வே, டென்மார்க், ஜப்பான், நியூசிலாந்து, போர்த்துக்கல் ஆகிய கடற்பிரதேசங்களில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றைவிட மேலும் சில அரிய கடல் உயிரினங்கள் அழிவுப் பாதையில் காணப்படுகின்றன. அவற்றைத் தடுப்பதற்காக ஏறக்குறைய 1100 கடல் விஞ்ஞானிகள் ஒன்றாகக்கூடி, ஒரு பொதுவான சட்டம் ஒன்றை இயற்றியுள்ளார்கள். அவற்றில் கூடுதலாகப் பசுபிக், இந்து, அத்திலாந்திக் சமுத்திரத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் அடங்குகிறார்கள். இதன்மூலம் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற பெரும்பாலான பாரிய நிறுவனங்களின் பாடு திண்டாட்டம் தான்.

# அமெரிக்காவுக்கு புதிய தலைவலி



அமெரிக்க நாட்டினுடைய கணினித் தரவுகளை வேறு நாடுகள் எடுப்பதால், அமெரிக்காவின் தனித்துவம் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் மட்டுமல்லாமல், உள்நாட்டில் காணப்படுகின்ற சில கணினி நிறுவனங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறை ரகசியங்களை இலகுவாகத் துப்பறிகின்றன.

இது அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தை ஓர் கலக்கு கலக்கியுள்ளது. ஏறக்குறைய 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதைத் தடுப்பதற்காக மற்றைய கணினி நிறுவனங்களிலிருந்து தண்டப்பணமாக அறவிடப்பட்டிருக்கின்றன. இப்படியான முயற்சிகளை அமெரிக்காவின் உள்ளூர்வாசிகளே தூண்டுகிறார்கள் என்ற கருத்து நிலவிவருகிறது. இணையத் தளங்கள் மூலம் சுலபமாகத் துப்பறியும் செயற்பாட்டைக் கொண்ட கணினித் தரவுகள் புகுத்தப்பட்டு, அதன்மூலம் பெருமளவு ரகசியங்கள் கணினித் தரவுகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன. இந்த முயற்சிகளை ஆய்வு செய்துபார்த்தபொழுது, ஏறக்குறைய 26 துப்பறியும் செயற்பாட்டு நிகழ்ச்சிகள் இருப்பதாகக் கருத்தப்பட்டுள்ளது. 83 மில்லியனுக்கும் அதிகமான நிகழ்ச்சித் திட்டங்கள் உலகளாவிய ரீதியில் துப்பறிதலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது இவற்றை ஒழிக்கும் முயற்சியில் முற்று முழுதாக இறங்கியுள்ளது.

# கையடக்கத் தொலை பேசியின் பாதுகாப்பு




உலகளாவிய ரீதியில் நவீன கையடக்கத் தொலைபேசிகளை நிறுவனங்கள் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை- கையடக்கத் தொலைபேசியை முடக்கக் கூடிய வைரஸ்கள் கணினி மூலம் அனுப்பப்பட்டுக் கொணடிருக்கிறன.

எல்லா கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களினதும் முக்கிய பிரதிநிதிகள் கோலாலம்பூரில் அண்மையில் கூடி, இதற்குரிய தீர்வு பற்றி ஆராய்ந்திருந்தனர்.

அத்துடன், இதை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதற்குரிய ஒரு பொதுவான கணினி மென்பொருள் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இது நொக்கியா, சொனி, எரிக்சன், மற்றும் மோட்டோ ரோலா ஆகிய கையடக்கத் தொலைபேசிகளுக்கு நன்கு பொருந்தக்கூடியவாறு உள்ளது.

இதன்மூலம் கையடக்கத் தொலைபேசியை முடக்குகின்ற கணினி நிறுவனங்களின் பாடு மிகவும் திண்டாட்டம்தான். ஏறக்குறைய 750 ஆயிரம் கணினிகள் 1 செக்கனுக்குள் முடங்கக் கூடிய வகையில் வைரஸ்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை தற்போது கண்டுபிடிக்கப்பட்ட பாதுகாப்புக் கணினி மென்பொருள் மூலம் தப்பவைக்க முடியும். அதேவேளை, 150 ஆயிரம் மோசமான முறையில் இயங்குகின்ற கணினிகள் கூட, இந்தக் கணினி மென்பொருளால் தடுக்கப்பட முடியும் எனவும் தொழில்நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள்.

# புதிய விஞ்ஞான மையம்

விஞ்ஞானரீதியாக சில முன்னேற்றங்களைக் கொண்டு நடத்துவதற்கு ஐரோப்பா பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு அம்சமாக 120 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விஞ்ஞானத்துக்கான பல்கலைக் கழகம் ஒன்றும் உருவாக்கப்பட உள்ளது. அது பலதரப்பட்ட திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. அதிலே மிக முக்கியமாக எக்ஸ்றே புற ஊதா, கதிர்கள், ஆகியவற்றைக் கொண்டு செய்யப்படக்கூடிய ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப் படும் என்று கூறப் படுகிறது. ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகள் எல்லாம் மின்காந்த கதிர் இயக்கச் செயற்பாடுகளை எதிர்த்து தடைசெய்யக்கூடிய அளவுக்கு இருக்கிறது.



ஆனால், இப்பொழுது அவை இதே கதிர் இயக்கச் செயற்பாட்டுக்கு உரிய ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை தோற்றுவிக்க முயல்வது, உலகமயமாக்கலின் உச்சக்கட்டம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். உண்மையில் புற ஊதாக் கதிர்களும், எக்ஸ்றே கதிர்களும் உடலுக்கு மிகவும் தீங்கு தரக்கூடியவை. ஆனால், அவற்றின் மூலம் விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள் பலவற்றைச் செய்யமுடியும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கையாக இருக்கிறது. ஏறக்குறைய 2012 ஆம் ஆண்டளவில் இப்படியான 14 மையங்கள் தோன்றும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

# மக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றி இளைய சமுதாயம் தழைக்க வேண்டும்

## தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

எமது சிறுவர்கள் பயங்கரவாதிகளாக காட்டப்பட்டு, அரச படையினரால் பல ஆயிரக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர் என - தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற தொழில்சார் பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றும் சிறுவர்கள் பிச்சை எடுக்கின்ற நிலையில் இருந்து வருகின்றனர். இந்த நிலையை நாம் காண்கிறோம்.

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதையும் கண்டு வருகிறோம்.

இவர்களுக்கான கல்வியிலே, அவர்களுடைய எதிர்கால நலன்களில் அக்கறை கொண்டு, இங்குள்ள நிறுவனங்கள் செயற்பட வேண்டும்.

எங்கள் தாயகப் பிரதேசத்திலே அழிந்துபோன, சிதைந்துபோன வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பி, எமது மக்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடியவர்களாக எல்லோரும் தங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

நீண்ட இலக்கோடு, இலட்சியத்தோடு விடுதலைப் போர் இந்த தேசத்தில் வளர்த்தெடுக்கப்பட்டது. அந்த இலட்சிய உணர்வோடும், விடுதலை வேட்கையோடும் இந்தத் தேசத்தின் விடுதலையை விரைவாக வென்றெடுக்க நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டியவராக உள்ளோம்.

எமது மக்களுடைய எதிர்பார்பபை நிறைவேற்றி, இளைய சமுதாயம் தழைக்க வேண்டும். ஏனெனில், நீண்ட கொடியதோர் போரின் அழிவுகளின் மத்தியில் எங்களுடைய தேசம் ஒவ்வொரு பாதையிலும் பெரும் அழிவை எட்டி நிற்கிறது.

எதிரி தொடுத்த போர் - சிறுவர்கள், முதியோர்கள் என எவரையுமே விட்டு வைக்கவில்லை. 65 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் போரின் அனர்த்தங்களால் இறந்துள்ளனர்.

இந்தப் போரின் அனர்த்தங்களால் எதிர்காலத்தின் தூண்களான சிறார்கள்கூட ஆயிரக்கணக்கில் பயங்கரவாதிகளாகக் காட்டப்பட்டு, பல ஆயிரக்கணக்கில் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருந்து வந்தன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு மல்லாவியில்

கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு - மல்லாவி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் துணுக்காய் பிரதேசத்தில் தேர்ந்தெடுத்த பயனாளிகளுக்கு பயனபடுத்தத்தக்க வகையில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவ போதனாசிரியர் குரு, கால்நடை மருத்துவர் கிரிதாகலா ஆகியோரால் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி வகுப்பில் 20 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து இந்த பயிற்சி வகுப்புக்கள் மாதத்தில் இருமுறை நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னாரில் கால்பந்தாட்டப் போட்டி

(மன்னார்)

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், மன்னார் மாவட்டத் தளபதியுமான லெப்டினன்ட் கேணல் விக்ரரின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று மன்னாரில் இடம்பெறவுள்ளது.

இந்த நினைவு நாளையொட்டி, மன்னார் மாவட்ட விளையாட்டுக் கழக சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட காற்பந்தாட்டப் போட்டியில் 26 கழகங்கள் போட்டியிட்டன.

## சிரமதானம்

2ம் லெப்டினன்ட் மாலதியின் 17 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கிளிநொச்சி, கோணாவில் பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கோணாவில், இராஜன்குடியிருப்பு, ஊற்றுபுலம் ஆகிய கிராமங்களில் இந்தச் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சிரமதானப் பணியில் கிராம அலுவலகர் உள்ளிட்ட 200 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## நினைவு நாள்

(புதுக்குடியிருப்பு)

1987 ஆம் ஆண்டு மே மாதம் இந்திய இராணுவத்தால் 8 அப்பாவித் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவு நாள், இன்று படுகொலை நடந்த இடமான புதுக்காட்டுச் சந்தியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## உலர் உணவு வழங்கல்

(பளை)

பளைப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் கோயில்வயல், பெரியகுளம், சோரன்பற்று, சீராவிக்குளம், மன்னகுண்டகுளம், இத்தாவில், பெரியகுளம், புலோப்பளை கிழக்கு, முடிச்சுப்பல்லிக் குளம் ஆகிய குளங்களின் புனரமைப்பு வேல்லகள் மேற்கொள்ளப்பட்டு பூரணப்படுத்தப் பட்டுள்ளன.

இந்த புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான கொடுப்பனவாக உலர் உணவுகள் வழங்கப்பட்டு வருகிறன.

(ஸ்ரீ)



வன்னிப் பதிவுகள்



கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 'ஆயிஷா' நூல் அறிமுக விழாவில் நூல் மதிப்பீட்டுரையை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியை நிகழ்த்துவதைக் காணலாம். படம் : பாஸ்கரன்

## நிவாரணம் வழங்கப்படாமையால் புனரமைப்பு பணி இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

அக்கராயன் பிரதேசத்தின் ஈச்சங்குளம் பகுதியில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், இதுவரையில் இதற்கான நிவாரணம் வழங்கப்படாமையால், இந்தப் புனரமைப்பு வேலைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மாரி காலம் தொடங்கியுள்ளமையால் - புனரமைப்பு வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலை தொடருமானால், செய்யப்பட்ட வேலைகள் யாவும் பயனற்றுப் போகும் என தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ)



கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலுள்ள பிரதான பாலம் உடைந்து விழும் நிலையில் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதைப் படத்தில் காணலாம்.



கிளிநொச்சியில் அமைக்கப்படுகின்ற திலீபன் மருத்துவமனைக்கான ஆரம்ப வேலைகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

## 2 ஆம் லெப். சுடர்ஒளியின் இறுதி வணக்க நிகழ்வு

கடந்த 1 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான விபத்தின்போது 2ம் லெப்டினன்ட் சுடர்ஒளி (மயில்வாகனம் தசரதன்) செல்வநாயகபுரம், திருகோணமலை என்ற போராளி சாவடைந்தார்.

இந்த போராளியின் இறுதி வணக்க நிகழ்வு புதுக்குடியிருப்பு-திருகோணமலை தொடர்பக மாவீரர் மண்டபத்தில், தமிழீழ மாவீரர் பணிமனையின் நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை திருகோணமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் திருமலை ஏற்றிவைகக, மாவீரர் சுடர்ஒளியின் வித்துடலுக்கான மலர்மாலையை மாவீரர் சுடர்ஒளியின் தாயாரும், சகோதரரும் அணிவித்தனர்.

தொடாந்து நினைவுரையை தலைமைச் செயலகப் போராளியான ஆனந்தன், திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், முல்லைத்தீவு மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

## அறிவித்தல்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அந்தப் பகுதி மக்களுக்கு அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## கிராமிய பொருளாதார கல்வி நிறுவனத்தில் இளைஞர், யுவதிகளுக்கான கௌரவிப்பு

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தில்-இளைஞர், யுவதிகளுக்கான தொழில்சார் பயிற்சி நிறைவு விழா கடந்த சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு நிறுவப் பணிப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களான வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம், உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவன வவுனியா மாவட்ட இணைப்பாளர் சத்தியசீலன், யுனிசெவ் வதிவிட பிரதிநிதி ஜெனிபுறூன் இலங்கைக்கான வாச் நிறுவன ஜப்பானிய பிரதிநிதி ரி.ஒய்ஸ் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் மாதவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் 200 இற்கு மேற்பட்ட பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

## சிறுபோக பயிர்ச்செய்கையின் அறுவடைவிழா ஆண்டான்குளத்தில்

மன்னார் ஆண்டான்குளப் பிரதேசத்தில் உழவுச் செய்கைமூலம் 105 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக பயிர்ச்செய்கையின் அறுவடை விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வு விதை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் தமிழீழ தேசியக் கொடியை வன்னி வேளாண்மைப் பணிப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைத்தார். அறுவடையை மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம், வன்னி வேளாண்மைப் பணிப்பாளர் இளம்பரிதி, மன்னார் உதவி விவசாய பணிப்பா ளர் ஸ்ரீதாசன் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உடையார்முன் இல்லார்போல் ஏக்குஅற்றும் கற்றார்*
*கடையரே கல்லா தவர்.*

திருக்குறள்

## நமது நோக்கு

# முரண்நிலை அரசியல் நகர்வுகளும் சமாதான நகர்வின் எதிர்காலமும்!

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வைப்பதற்கான பகீரதமுயற்சிகளை, நோர்வே தலைமையில் அதனை வலியுறுத்திநிற்கும் நாடுகள் - இலங்கைக்கு வெளியே மிகவும் தீவிரமாக மேற்கொண்டுவருவதாக, பரந்தளவில் பரபரப்பாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுவரும் வேளையில், கொழும்பில் ஆட்சித்தலைமைகள் மத்தியில் இன்னமும் அதுதொடர்பாக - உறுதியும், தெளிவின்மையுமற்ற, முரண்போக்கிலான கருத்து நிலைப்பாடே தொடர்ந்தும் நிலவிவருகின்றது.

குறிப்பாக - தேசிய சமாதான ஆலோசனைச் சபை என்ற பெயரில் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள, தற்போதய சூழலுக்குப் பொருத்தமற்றதும், சமாதானமுயற்சிகளை வேறொரு நோக்கில் திசைதிருப்பி காலத்தை இழுத்தடிக்கும் மூலோபாயத்தைக் கொண்டதும் - ஹெல உறுமய, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தினாலும் நிராகரிக்கப்பட்டதுமான, அமைப்புத் தொடர்பாக, எழுந்துள்ள கருத்து மோதல்களில் இன்றைய நாட்கள் கழியத்தொடங்கியுள்ளமையைக் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

காலத்தை இழுத்தடித்தல் என்ற நோக்கத்தில் முதற் கட்டம் தற்போது ஆரம்பமாகிவிட்டதைத்தான் குறிப்பிடுகின்றோம்.

தேசிய சமாதான ஆலோசனைசபையை நிராகரித்து, அதில் - தான் இப்போதைக்கு கலந்துகொள்வது சாத்தியமில்லையென்பதும், ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ உடன்பாடுகளின் அடிப்படையில், தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவாத்தைகளை தாமதமின்றி ஆரம்பிப்பதே இப்போதைய தேவையென்றும், அதற்குத் தாம் முழுமையான ஆதரவை வழங்கத் தயார் என்றும் - எதிர்க் கட்சித் தலைவரான ரணில் ஒரு இறுக்கமான கருத்தை முன்வைத்ததையடுத்து, சினமுற்ற ஜனாதிபதி அதற்கு விளக்கமளிக்க முற்பட, காலத்தை இழுத்தடிக்கும் கருத்தியல் யுத்தம் ஆளும் - எதிர்க்கட்சிகளிடையே ஆரம்பமாயிற்றென்றே கூறவேண்டும்.

ஜனாதிபதியும் - ரணில் விக்கிரமசிங்கவும் தமது பாரம்பரிய அரசியல் மோதல் மற்றும் முரண் நிலையில் இருந்து எந்தவொரு வகையிலும், எந்தவொரு பிரச்சினையிலும் அனுசரித்துப்போகும், காலத்தின் தேவைக்கும், தேவைகளின் அவசியத்திற்கும் ஏற்ப - விட்டுக்கொடுத்து தேசிய நலனின் அடிப்படையிலேனும் இயங்கும் மனோபாவம் கொண்டவர்களாக இல்லை என்பதையே அண்மைக் கால அவர்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

தேசிய சமாதான ஆலோசனை சபை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துள்ள தற்போதைய நிலைப்பாடானது, அரசியல்ரீதியில் ஜனாதிபதியை இக்கட்டில் மாட்டிவிடும் உள்நோக்கத்தைக் கொண்டதாக இருந்தாலும்கூட, அதுவே தேசிய நலனின் அடிப்படையில் சரியானதாகவும் உள்ளதெனலாம்.

அதுமட்டுமல்ல, அவர் தனது இன்றைய நிலைப்பாட்டை - அதுவும் சமாதான முயற்சி முன்னெடுப்புத் தொடர்பான அரசியல் நிலைப்பாட்டினை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின்மூலம் எழுத்துமூலமான ஆவணமாகவே வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

ஒஸ்லோவிலும், ரோக்கியோவிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, எட்டப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு, நாம் பூரண ஆதரவை வழங்குவோம் என அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதுடன் - இன்றைய சமாதான நகர்வுகளின் இழுபறி அல்லது தேக்கநிலைக்கு ஐ.ம.சு.முன்னணிக்குள் அங்கம்வகிக்கும் கட்சிகளிடையே அது தொடர்பாக உள்ள உள்ளக முரண்பாடுகளே காரணமாகும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த முரண்பாடுகள் நீக்கப்படாதவரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிப்பதென்பது சாத்தியமேயில்லை. குறிப்பாக அரசின் பிரதான பங்காளியான ஜே.வி.பியினரின் சாதகமான ஒத்துழைப்பை சமாதான முயற்சிகளில் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு உள்ளது. முதலில் அதனை அவர் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துப்பட அவர் எழுதிய இக்கடிதம் இன்றைய சமாதான அரசியல் யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவுள்ளதுடன் - தேவையற்ற சாக்குப் போக்குகளைகூறி இதனைத் தட்டிக்கழிக்க வேண்டாமென அவரை அச்சுறுத்துவதாகவும் உள்ளது.

இதே ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆட்சியில் - பேச்சுவார்தைகள் ஒரு தேக்கநிலையை எட்டும் சூழலில், இதே இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விவகாரம் பிரச்சினைகுரியதாக எழுந்தபோது - அதனை இப்போது எதிர்க்கட்சியில் உள்ளபோது எடுத்துள்ள நிலைப்பாட்டை பின்பற்றி, அதனை முன்நகர்த்துவதற்குப் பின்னடித்தார் என்பதையும் நினைவில் கொள்வது அவசியமே...

ஆட்சிக் கதிரையில் இருக்கும்போது, அதனைப் பாதுகாக்கும் வகையில் ஒரு மூலோபாயத்தையும், எதிர்க் கட்சியில் உள்ளவேளை ஆளும் கட்சியினரை சங்கடத்திற்குள்ளாக்கும் ஒரு தந்திரோபாயத்தையும் கையாளும் பேரினவாத தலைமைகள் ஒருபோதுமே ஒருமித்த குரலில் சமாதானம் தொடர்பாக ஒரு கருத்து நிலைப்பாட்டுக்கு வரமாட்டார்கள் என்பதையே இலங்கையின் அரசியல் யதார்த்தம் உணர்த்துவதாகவுள்ளது.

## நாடும் நடப்பும்




## பருத்தித்துறை நகரசபை

# சொந்தக் கட்டடத்தில் இயங்க படையினர் அனுமதி மறுப்பு!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் தொடர்ந்து அலுவலகத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1996 ஆம் ஆண்டு படையினர் வடமராட்சி பிரதேசத்தைப் படையினர் கைப்பற்றியபோது, பருத்தித்துறை நகரில் இறங்குதுறையை மையமாக வைத்து பாரிய இராணுவமுகாம் ஒன்றை அமைத் தனர்.

இதனால் இந்தப் பகுதியில் இயங்கிவந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் படையினரின் முகாமினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதனால் பருத்தித்துறை நகரசபை உட்பட பல அரச நிறுவனங்கள், தனியார் கட்டடங்களில் இயங்கிவருகின்றன.

பருத்தித்துறை நகரசபை தற்போது இயங்கிவரும் கட்டடத்தின் சொந்தக்காரர் தனது கட்டடத்தை மீளத்தருமாறு கோரியதையடுத்து, நகரசபை தொடர்ந்து இயங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து பருத்தித்துறை நகரில் படையினரின் இராணுவ முகாமினுள் அமைந்தள்ள தமது சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு அனுமதிக்குமாறு நகரசபை இராணுவ அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், படையினர் இந்த சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்குத் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருவதாக நகர சபை அதிகாரியொருவர் தெரிவித்தார். (14)

# ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா கொடுப்பனவு

ஜனாதிபதி சந்திரிகாவின் 17 ஆலோசகர்களுக்கும் மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஆலோசகர்களில் அதிகூடிய கொடுப்பனவை மனோ தித்தவெல பெறுகின்றார். இவர் மாதாந்தம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வாகன எரிபொருள் கொடுப்பனவையும் பெற்றுவருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அரசாங்கத்தின் திட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை இவரே வழங்கி வருகிறார்.

இவருக்கு அடுத்ததாக சட்ட ஆலோசகர் நைகல் ஹட்ச், ஊடகத் துறை மற்றும் தொடர்பாடல் ஆலோசகர்கள் டிக்ரி கொப்கேகடுவ, நிசாந்த ரணதுங்க ஆகியோர் தலா 75 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்று வருகின்றனர். (01)

# மதுபான வழக்கில் இருவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம்!

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், சட்டவிரோத விற்பனையில் ஈடுபட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் இந்தத் தண்டனையை வழங்கினார். கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

துன்னாலையைச் சேர்ந்த பெண்ணொருவர் 120 கிராம் எடையுள்ள கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் கோடாவை வைத்திருந்தமையால், அவரைக் கைதுசெய்த நெல்லியடிப் பொலிஸார் அவரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு, ஒரு வருட சிறைத் தண்டனையையும் விதித்து தீர்ப்பு வழங்கினார். (12)

# பொதுமக்கள் பாவனைக்கு விரைவில் தம்புதோட்டம்!

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தென்மராட்சி தம்பு தோட்டப் பிரதேசம் விரைவில் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக, யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென்மராட்சியின் சில பகுதிகளை இராணுவத்தினர் பொது மக்களின் பாவனைக்கு வழங்கவுள்ளதாக ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

தம்புதோட்டப் பிரதேசத்தின் இரண்டாயிரம் சதுர மீற்றர் பரப்புள்ள பகுதிகளில் மிதிவெடி அகற்றி மக்கள் பாவனைக்கு விட படையினர் சம்மதித்திருந்தனர். இதையடுத்து யாழ்.மாவட்ட வெடிபொருள் அகற்றும் பிரிவினர் அப்பிரதேசத்தை இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினரிடம் வெடிபொருள் அகற்றுவதற்காக வழங்கியிருந்தனர்.

தற்போது அந்தப் பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றப்பட்டுள்ளமையால் அப்பிரதேசத்தை மக்கள் பாவனைக்குவிட, யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டலுவலகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

அடுத்தவாரமளவில் இந்தப் பகுதி பொதுமக்களின் பாவனைக்காக வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

# விறகு முறிக்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கினார்!

## திருவடிநிலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதியில் விறகு எடுப்பதற்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 7.00 மணியளவில் திருவடிநிலை சுழிபுரம் பகுதியில் இடம்பெற்றது. பழனிவேல் மாணிக்கம் (வயது 30) என்ற குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

திருவடிநில்லையில் நேற்றுமுன்தினம் காலை சமையலுக்குத் தேவையான விறகு முறித்துக் கொண்டிருந்த சமயமே இவர் மிதி வெடியில் சிக்கிக் காயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் காயமடைந்த பகுதியில் இருந்து 200 மீற்றர் தூரத்துக்கு அப்பால் மிதிவெடி அபாயப் பிரதேசம் காணப்பட்டதாகவும், சம்பவம் நடைபெற்ற இடத்தில் முன்னர் மக்கள் நடமாட்டம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நெடுந்தீவில் சிகை ஒப்பனையாளரை பலவந்தமாக அழைத்துச் செல்கின்றனர்

## தீவக ஒப்பனையாளர் சங்கம் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் குடிசைத் தொழில் செய்வதற்கு தமது சங்கத்தின் உறுப்பினர்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்படுவதாக, தீவக சிகை ஒப்பனையாளர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து தீவக சிகை ஒப்பனையாளர் சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

'குடிசைத்தொழில்' முறைமை பல வருடங்களுக்கு முன்னரே வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசத்தினால் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவில் மட்டும் மிகச்சிறிய தொகையினராகிய நமது உறுப்பினர்களை மிரட்டி, பலவந்தமாக சிகை ஒப்பனை செய்யுமாறு தொல்லை கொடுப்பதாக தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்துக்கு புகாரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஊடாக கிராமசேவையாளர்களுக்கும், விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியற்துறைக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் ச.அன்ரன் இராசநாயகம் தெரிவித்தார்.(113)

அரசியல் நோக்கு...

கே.ரி. கணேசலிங்கம்



# புதிய பரிமாணம் எடுக்கும் சீன - இலங்கை உறவு

இலங்கை இனப்பிரச்சினைக்கான பரிமாணத்தில் புதிய திருப்பங்கள் எப்போதும் போல் தற்போதும் நிகழத்தவறவில்லை. சமாதான அரசியல் ஆரம்பிக்கப்பட்ட பின்பு, நிகழ்ந்துவரும் பரிமாணங்களில் அதீத முக்கியத்துவத்தைப் பெறும் தற்போதைய போக்குக்கு விடுதலைப்புலிகளே பிரதான மையமாக விளங்குகின்ற கட்டமாகப் பிரித்துப்பார்க்கமுடியும். பிரதானமாக இலங்கை இராணுவத்தின் ஆயுத தளபாடத்துடன் முதலாவது பரீட்சயம் ஆரம்பமானது. இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியிலும், சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமாரான காலத்திலும் நெருக்கம் அதிகரித்தது. இலங்கை கடற்படை, தரைப்படைப் பயன்படுத்துயின் ஆழ்கடல் பிரதேசங்களை சீனாவுக்கு ஓர் உடன்பாட்டின் வாயிலாக கைமாற்றிய இலங்கை, வடகிழக்குக் கடற்பிரதேசத்தை அதிகம் சீனாவுக்கு தாரைவார்க்க விரும்பியது. இதில் ஒரு கட்டத்தில் மீன்பிடி ரோலர் ஒன்றை இழந்ததுடன், தனது பிரஜைகளை மீட்டெடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதன் பின்னர் தற்னர். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொதுவான ஒரு நோக்கில் அளவீடு செய்தால், தமிழ் மக்களின் அரசியல் அல்லது விடுதலைப் போராட்டம் பிரதான நிர்ணய சக்தியாக அமைந்திருக்கின்றது. அதிலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளே இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பின் பிரதான சக்திகளாக விளங்குகின்றனர். தற்போது ஏற்பட்டிருக்கும் புதிய



பரிமாணத்தையும், அதற்கான காரணங்களையும் விரிவாகப் பரிசீலிப்போம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் சமாதானப் பேச்சுக்கள் நின்றுபோனாலும், போர் நிறுத்த உடன்படிக்கையும், தமிழர் தரப்பு முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையும் தொடர்ச்சியான சமாதான அரசியலை வெளிப்படுத்தியது. ஆனால், இவ்விரு மாற்று நிர்ணயங்களைப் புதிதாக ஆட்சிக்கு வந்த மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் (SLFP+JVP) திட்டமிட்டவிதத்தில் தந்திரமாகக் கையாண்டு, காலத்தை நீடித்து ஒரு சுமுகப்போக்கை ஏற்படுத்த விரும்பியது. ஆனால், அத்தகைய சுமுகப் போக்கு விடுதலைப்புலிகளின் நடவடிக்கையால் குழப்பப்பட்டுள்ளதுடன் சர்வதேச, பிராந்திய மட்டத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இவற்றின் விளைவாக ஏற்கனவே காணபபட்டுள்ள பிரதான அரசியல் சக்திகளின் நகர்வுகளும் குழம்பியுள்ளன. குறிப்பாக இலங்கை, தமிழ் மக்களின் இனப்பிரச்சினையோடு இரண்டு அந்நிய சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கம் விளைவித்துவந்தன. அவையால் ஏற்பட்ட தாக்கங்கள் தமிழ் மக்களுக்கு இடையிடையே சாதகமாகவும், பாதகமாகவும் மாறி மாறி அமைந்தன. அவ்விரு சக்திகளும் - இந்தியாவும், அமெரிக்காவும் ஆகும். ஆனால், தற்போது மூன்றாவது சக்தியொன்றின் அறிமுகம் ஒன்று வெளிப்படையாக ஆரம்பித்துள்ளது. அது ஆரம்ப காலத்திலிருந்து சிங்கள அரசியலுடன் இணைந்து மறைமுகமாக செயற்பட்டிருக்கின்றது. தற்போது வெளிப்படையாக செயற்படத் தொடங்கியுள்ளது. அதுவே சீனாவாகும். அதன் வரவு பற்றி விரிவாக நோக்குவோம்.

சீனா - இலங்கை அரசியலோடு நெருக்கமடைந்த காலத்தை மூன்று கின்ற அநேகமாக இராணுவ ஆயுதத் தளபாடங்கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவையாகவே காணப்பட்டன.

இதே காலத்தோடு இரண்டாவது பரீட்சயம் ஆரம்பித்தது. அது இலங்கையில் மார்க்சிஸப் பாணியில் ஆயுதப் போராட்டமூடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த விரும்பிய, ஜே.வி.பி.என்ற அமைப்பின் ஆரம்பகால வளர்ச்சியோடு தொடர்புபட்டது. சீனச்சார்பு கம்யூனிஸத்தைப் பின்பற்றிய பிரிவிலிருந்தே ஜே.வி.பி உதயமானது. இந்த அமைப்புக்குரிய ஆரம்ப கால அறிவியல் மட்டத்திலான பிரசுரங்களை, கொள்கைகளை சீனாவிலிருந்தே சிங்கள மொழியில் தயாரித்து இலங்கைக்குக் கொண்டுவந்ததாக தெரியவருகின்றது. சீனச்சார்பு 'சண்' என்று பேசப்பட்ட சண்முகதாஸனின் அமைப்பிலிருந்தே ஜே.வி.பி.உருவாகியது. எனவே இலங்கையின் ஆட்சிமாற்றத்தோடு ஆயுதப் சீனாவின் இரண்டாவது பரீட்சயம் நிகழ்ந்தது. இந்தக் கருத்து பெருமளவுக்குத் தற்போது பேசப்படாது விட்டாலும், வரலாற்றடிப்படையில் சீனாவுடனான அரசியல் உறவடிப் படையில் மிகச் சிறப்பான தன்மை என்பதில் அதிகமாக வேறுபாடு கிடையாது. சீனச்சார்புப் புரட்சியையே ஆசியாவுக்கான மாதிரி எனக் கருதிய றோகண விஜயவீரா அதன் பாணியில் புரட்சியை திட்டமிட்டாலும், இலங்கையில் ஊறிப்போன சிந்தாந்த தனித்துவங்களும், குடியேற்றவாத மனோ நிலையும் அவரது அணுகுமுறையில் நெருக்கடியைக் கொடுத்ததுடன், ஜே.வி.பியின் யதார்த்தவாதக கோட்பாட்டிலும் பலவீனமான அணுமுறைகளே அவர்களின் ஆயுதப் போராட்டம் தோற்றதற்குப் பிரதான காரணமாகக் கூறப்படுகின்றது. எனவே சீனாவின் இரண்டாவது பரீட்சயம் சற்று ஆபத்தானது, அபாயத்தைக் கடந்த காலத்தில் ஏற்படுத்தியது.

மூன்றாவது பரீட்சயம் இலங்கை இனப்பிரச்சினையுடன் ஏற்பட்டதென்றே கூறலாம்.

தமிழர்களின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்கு ஆயுதத் தளபாடங்களை வழங்கியது என்ற விதத்தில் சீனாவை மூன்றாவது பரீட்சியத்தில் அறிமுகப்படுத்தலாம். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க- அரசாங்கத்தின் காலத்தில் இலங்கை போது சீனத் தூதுக்குழுவொன்று நேரடியாக இலங்கைக்கு வருகை தந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, என்ற வேறுபாடின்றி எல்லா அரசியற்தலைவர்களையும் சந்தித்து உரையாடியுள்ளது. சில முதலீட்டுத்திட்டங்களிலும், மேலும் பல பொருளாதாரத் திட்டங்களோடு சீனத்தூதுக்குழு இலங்கை அரசுடன் உடன்பாடுகளை எட்டியுள்ளது. இதற்குச் சற்று முன்னர் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டபோது, சீனத்தூதுவர் இலங்கைக்கு விஜயம் செய்ததுடன் வடக்கு - கிழக்குக்கு வருகை தந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரைச் சந்தித்து உரையாடியதும், குறிப்பிடக்கூடிய அரசியல் உறவாக அமைந்திருந்தது. அந்தக் காலப் பகுதியில் இதே பந்தியில் சீனாவுடன் தமிழர் தரப்பினரின் உறவு பற்றிய விடயத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டிருந்தது. அந்த வகையின் தொடர்ச்சியாக பார்க்கப்படும் இன்றைய சீனாவின் வருகை இலங்கை அரசுக்கு மூன்றாவது தெரிவை ஏற்படுத்தியதுடன், ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திவரும் இரண்டு சக்திகளுக்கும் நெருக்கடியைக் கொடுப்பதாகவும் அமையும். அதேநேரம் இலங்கையின் அரசியல் தலைமைக்கு பாதுகாப்பான நகர்வைக் கொடுப்பனவாகவும் அமையும். பிரதான சக்திகளின் பிந்திய அபிவிருத்தியை விரிவாக நோக்குவோம்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் இவ்விரண்டு சக்திகளையும் நெருக்கடிக்கு உள்ளாக்குவதில் கணிசமான பங்கை எடுத்துள்ளது. சேது கால்வாயை அமைப்பதென்ற இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கை தென் இலங்கைப் பொருளாதார வளர்ச்சியையும், வளத்தையும் பாதிப்பதுடன், வடக்கு துறைமுகங்களையும, வளத்தையும் வலுவுடையதாக மாற்றுவதில் தீவிரத்தன்மை அடைந்துவருகிறது. இத்திட்டத்தை நிறுத்தமுடியாத நிலையில் வெளிவிவகார அமைச்சின் தலைமையில் சில இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தகைய தந்திரத்தில் தலையை நுழைத்துள்ள சீனாவின் வருகை இந்தியாவை மட்டுமல்ல, அமெரிக்காவையும் பாதிக்கும் அரசியலாகவே உள்ளது. சேது கால்வாய் திட்டத்தை முறியடிக்க சந்திரிகா - ராஜபக்ஷ அரசாங்கத்தால் அமெரிக்காவை நாட முடியாதென்பது ஜே.வி.பியின் அமெரிக்க எதிர்ப்பும் ஒரு காரணமாகும். ஜே.வி.பியை வளர்த்துவிடுவதாகவே அவ்வாறான அணுகு முறைகள் அமைந்துவிடுவன என்ற அச்சம் சந்திரிகாவிடம் உண்டு. இதனால், இந்தியாவின் எதிரியை தன்னோடு இணைத்துக் கொள்வதால், இந்தியாவின் போக்கில் நெகிழ்ச்சித் தன்மையை ஏற்படுத்துவதுடன் ஜே.வி.பி. - சீன நெருக்கதிற்கும் நெருக்கடி கொடுக்கலாமென கதிர்காமர் தலைமையிலான குழு கணக்குப் போட்டிருக்கலாம். ஏனெனில் சீனாவின் ஆசிய நாடுகளுக்கான அரசியல் மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்ட ஜே.வி.பியின் போக்கு, சந்திரிகாவின் அரசியலுக்கு பின்னடைவாகவே அமைந்திருந்தது. எனவே, இந்த நகர்வைத் திட்டமிட்டே அவர்கள் மேற்கொண்டனர். ஒரே தடவையில் இரண்டு விடயங்களுக்கு இந்தநகர்வு பதிலளித்திருக்கும். ஆனால், சீனா - இலங்கை அரசாங்கத்தைவிட ஜே.வி.பியையே அதிகம் நெருங்கிவருவதாக பார்க்க வேண்டும் போலுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் நிலையும், போக்கும் எப்படி அமையுமென்பதே முக்கியமான கேள்வியாகும்.

வெளிப்படையாகக் கூறுவதாயின் இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளிலிருந்து அமெரிக்கா புறந்தள்ளப்பட்டாலும், அதன் ஆதிகம் தொடரும். ஆனால், இந்தியா- சீனாவின் நகர்வுடன் ஒப்பிடும் போது, தொய்வாக தற்போது அமொரிக்க உறவு காணப்படுவதென்பது தெளிவானதொன்றாகும். ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் காலத்தைக் கடந்த நிலையில் அமெரிக்கச் செல்வாக்குச் சரிந்துள்ளது. சீனாவின் நடவடிக்கையால் அமெரிக்கா அதிருப்தி அடைந்தாலும், ஜே.வி.பிக்கு ஏற்பட்டுவரும் மக்கள் செல்வாக்கை அமெரிக்கா மறுத்துவிட முடியாது. இந்தியாவின் அணுகுமுறையால் வடக்கு முக்கியம் பெறும் நிலை மேலோங்குமாயின், அமெரிக்கா இலங்கை முழுப் பரப்பிலும் தனக்கு சாதகமான சக்தியைக் கண்டுபிடித்து இணைத்துக் கொள்கின்ற நிலையே ஏற்பட்டுள்ளது. அதனை அடைவதற்கு முன்பு தென்னிலங்கையில் அமெரிக்



காவின் நெருங்கிய சக்தியான ஐ.தே.கவையும், அதன் தலைமையையும் ஆட்சியில் அமர்த்த அமெரிக்கா முயலும் என்பதில் சந்தேகமில்லை.

ஐ.தே.கவை நிரந்தர நண்பனாக அமெரிக்கா கருதினாலும் வடக்கு, தெற்கு அடிப்படை முக்கியத்துவத்தில் முன்னேற்றம் ஏதாவது ஒருவகையில் நிகழுமாயின், அமெரிக்கா வடக்கில் தனித்துவமான சக்திகளை நாட வேண்டிய நிலை தவிர்க்க முடியாததே.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய விஜயம் சந்திரிகா- ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஆபத்தானதாகவே அமையவுள்ளது. அத்தகைய மாறுதலுக்குள் பிராந்திய சக்தியான இந்தியாவை மட்டும் நம்பி சந்திரிகா அரசாங்கம் காய் நகர்த்த முடியாது. ஏற்கனவே விடுதலைப் புலிகளின் நகர்வை முறியடிக்க முன்வைத்த தேசிய மகாநாடும் தோற்றுவிட்ட நிலையில் சந்திரிகா அரசாங்கம் நெருக்கடியை அடைந்துள்ளது. மாற்று அணுகுமுறைக்காக இந்த அரசாங்கம் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளதென்பதே சீனத் தூதுக் குழுவின் வருகையும், அவர்களது வருகையின் முக்கியத்துவமும் அமைந்தது. சீனர்கள் தமது முக்கியத்துவத்தை உலகத்திற்கு காட்ட எடுத்த முயற்சியாகவும் அமைந்துள்ளது. சீனா - இந்தியர்வை முறியடித்து இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஆதிக்கத்தைக் கடந்த நான்கு வருடமாக நிறுவுவதில் வெற்றிகண்டு வருகிறது. அந்த வரிசையில் இலங்கையுடனான உறவு அவசியமானதும், முக்கியம் பொருந்தியதுமாகும். இதனால் இலங்கையுடன் சீனா நெருக்கமான உறவை அதிகம் விரும்புகின்றது. எனவே, பரஸ்பரம் இரண்டு நாடுகளது உறவும் வளருவதற்கான வாய்ப்பையே அதிகம் கொண்டிருக்கின்றது எனக் கூறலாம். மேலும் தவறுக்காக இன்னோர் அம்சத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

இலங்கையிலுள்ள அனைத்துத் தூதுவர் மையங்களும், அனைத்து அணுகு முறைகளும் ஆங்கிலத்தில் பராமரிக்கப்படுவதுடன், ஆங்கிலத்திலேயே தொடர்பாடலையும் வைத்துக் கொள்ள விரும்பு கின்ற போக்கைக் காணமுடியும். ஆனால், சீனத் தூதரகம் மட்டும் சிங்களத்தில் ஆவணங்களைக் கொண்டிருபபதுடன், பணியாளர் எல்லோரும் சிங்களத்தில் உரையாட பழக்கப்படுத்தியுள்ளதுடன், தொடர்பாடல் மொழியாக சிங்களத்தை சீனத் தூதரகம் தெரிவு செய்துள்ளதென்பது சீனாவின் போக்கைப் பற்றிய தெளிவை உணரக்கூடியதாக உள்ளது எனலாம். சீனதூதரகத்தில் பணிபுரியும் 200-400 சீன நாட்டவருக்கு பரீட்சயமான மொழியாக சிங்களத்தை ஆக்கியுள்ளனர்.

எனவே, சீனாவின் வருகை இலங்கை அரசியலில் அதன்பங்கை அதிகரிக்கவைக்கும். இலங்கை அரசாங்கத்திற்கும் மாற்றுக் கொள்கை சக்தி ஒன்றின் ஆதரவை வேண்டியிருப்பதில் சீன - இலங்கை நெருக்கம் தவிர்க்க முடியாதது. இலங்கை அரசியலில் புதிய பரிமாணத்தை இந்த உறவு ஏற்படுத்தும். இலங்கையில் சந்திரிகா குமாரதுங்க வெளிப்படையாக இந்தியாவை ஆதரித்தாலும், உளநாட்டுப் பிராந்திய நிலையைப் பொறுத்து, சீன உறவு தவிர்க்க முடியாதென்பதைக் காட்டுகிறது. குறிப்பாகக் கூறுவதாயின் - ரணில் அமெரிக்கா பக்கமும், சந்திரிகா இந்தியா பக்கமும், ஜே.வி.பி. சீனா பக்கமும் என்ற மூன்று சக்திகளின் மையத்தின் இயங்கு விசையாக இனப்பிரச்சினை நகர்கிறது. ✤

# குழப்பங்கள் நிறைந்த சோமாலியாவில் ஜனாதிபதியாக அப்துல்லா யூசுப் தெரிவு!



சோமாலியாவில் இடம்பெற்றுவரும் குழப்பங்களுக்கு தீர்வுகண்டு அங்கு ஒரு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் வகையில் அந்நாட்டு நாடாளுமன்றம் அப்துல்லா யூசுப் என்பவரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்துள்ளது.

சோமாலிய தலைநகரில் காணப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அடுத்து, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கென்யத் தலைநகரான நைரோபியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில் இடம்பெற்றது.

1991 ஆம் ஆண்டு இருந்த இராணுவ ஆட்சியாளரான மொகமட் சியாட்பாரே கிளர்ச்சிக்குழுக்களால் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் அங்கு இன்றுவரை குழப்பம் நிறைந்தே காணப்படுகிறது.

இந்தக் குழப்பங்களால் சோமாலியாவிலிருந்து இரண்டு மில்லியன் மக்கள் அயல்நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச்சென்றுவிட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக கென்யத் தலைநகர் நைரோபியில் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்தே நேற்றுமுன்தினம் இந்தத் தேர்தல் நடைபெற்றது.

28 பேர் போட்டியிட்ட இந்தத் தேர்தலில் மூவர் அதிலிருந்து பின்வாங்க, ஏனையோர் வாக்களிப்பு விகிதாசாரப்படி விலக்கப்பட இருவருக்கிடையிலேயே போட்டி நிலவியது.

இறுதியான - மூன்றாம் கட்ட வாக்களிப்பின்போது அப்துல்லா யூசுப்பிற்கு 189 ஆதரவு வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா அடோவிற்கு 79 வாக்குகளும் கிடைத்தன.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தனது முதலாவது உரையை நிகழ்த்திய அப்துல்லா யூசுப் - சோமாலியாவில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநிறுத்தப்போவதாக உறுதியளித்தார்.

இவரது முதற்தெரிவு பிரதமரைத் தேர்வு செய்வதாகவே இருக்குமென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் அடுத்த இரண்டு மாதங்களுக்கு இவர் சோமாலியாவுக்கு திரும்பமாட்டாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கடல் இலக்குகளைத் தாக்கியழிக்கும் 'பிரமோஸ்' ஏவுகணை உற்பத்தியை இந்தியா ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்

(திருச்சி)

கப்பல்களைத் தாக்கும் 'பிரமோஸ்' ஏவுகணை உற்பத்தியை இந்தியா ஆரம்பிக்கவுள்ளது.

கடல் இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைச் சோதனையில், இந்தியக் கடற்படைக்குத் தேவையான வெற்றி கிடைத்துள்ளதை அடுத்து, சோதனைக்கு அடுத்த நிலையான தயாரிப்புக்கான திட்டங்களைச் செய்து வருகின்றோம் என இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டி.ஆர்.டி.ஓ) தலைமைக் கட்டுப்பாட்டாளர் சிவதாணு தெரிவித்தார்.

திருச்சியில் நடந்த ஜி.வி.என். புற்றுநோய் மைய ஆரம்ப விழாவில் கலந்துகொண்ட அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

கப்பல்களைத் தாக்கும் 'பிரமோஸ்' ஏவுகணை உற்பத்தி ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்தியாவுக்கும் - ரஷ்யாவுக்கும் இடையிலான ஒப்பந்தப்படி இந்த ஏவுகணை இரு நாடுகளிலும் தயாரிக்கப்படவுள்ளது.

இதன் திறன், நேர இலக்கு மற்றும் கடலிலிருந்து நில இலக்கை விரைவில சென்றடையச் செய்வோம். மேலும், நிலப்பரப்பிலிருந்து மற்றொரு நிலப்பரப்பை நோக்கித் தாக்கும் இலக்குகள், கடலிலிருந்து நிலத்தைத் தாக்கும் இலக்குகள் என இந்த ஏவுகணையின் செயற்றிறன் அதிகரிக்கப்படும். இதனைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக விண்ணிலிருநது இயக்கப்படும் ஏவுகணை பற்றிய திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இப்போது இந்தத் திட்டம் வடிவமைப்பு நிலையில் உள்ளது. இந்தத் திட்டம் செயற்பட இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகும் எனத் தெரிவித்தார்.

# 'சூப்பர் மான்' நடிகர் மரணம்!

*ஆங்கிலப் படங்களில் முன்னர் சூப்பர் மானாக நடித்து புகழ்பெற்ற கிறிஸ் டோபர் ரீவ் நேற்று உயிரிழந்தார்.*

*1995 ஆம் ஆண்டு குதிரைச் சவாரி செய்த போது கீழே விழுந்து கழுத்து எழும்பு முறிவடைந்து, உடல் ஊனமுற்ற நிலையில் கடந்த 9 ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் வாழ்க்கையை கழித்து வந்தார் கிறிஸ்டோபர் ரீவ்.*

*நேற்றுமுன்தினம் இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு நியூயோர்க் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி தனது 52 வயதில் அவர் உயிரிழந்தார்.*





## அருணாச்சல பிரதேச சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி

இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 60 தொகுதிகளில் 57 இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 32 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. இதில் 3 இடங்களில் அந்தக் கட்சி போட்டியில்லாமல் வெற்றி பெற்றுள்ளது.

இதனால் அந்தக் கட்சியே மீண்டும் ஆட்சியை அமைக்கிறது. அந்த மாநில காங்கிரஸ் முதல்வர் கெபாங் அபாங்கும் வெற்றிபெற்றுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சி 7 இடங்களிலும், அருணாச்சல் காங்கிரஸ் 2 இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் 2 இடங்களிலும் சுயேச்சைகள் 12 இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

# ஈராக்கில் அமைந்துள்ள இடைக்கால அரசிடம் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு சதாரின் கிளர்ச்சியாளர்கள் இணக்கம்!

ஈராக்கின் இடைக்கால அரசுடன் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து சதார் நகரிலுள்ள ஷியா கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு முன்வந்துள்ளனர்.

இதன்மூலம் கடந்த ஆறுமாத காலமாக சதார் நகரில் இடம்பெற்று வந்த மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த ஆயுத ஒப்படைப்பு மூலம் சதார் நகரில் மோதல்கள் முடிவுக்கு வருவதாக சதாரின் சிரேஷ்ட உதவியாளர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன் சதாரின் கீழ் இயங்கி தற்போது சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மெடி கிளர்ச்சிவாத உறுப்பினர்களை விடுவிப்பதற்கு ஈராக் இடைக்கால அரசு இணங்கியுள்ளதாகவும் இதனால், நவீனரக மற்றும் மத்தியதர ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு தயாரெனவும் தெரிவித்த அவர்,

ஒப்படைக்கப்படும் ஆயுதங்களுக்கு அரசு பணம் செலுத்துமெனவும் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த போரால், சிதைவடைந்துபோயுள்ள சதார் நகரத்தை மீள்புனரமைப்புச் செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆயுத ஒப்படைப்புக் குறித்து நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட அதே நேரம் பாக்தாத்தின் இருவேறு இடங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 11 பேர் பலியாகினர்.

நேற்றுமுன்தினம் பாக்தாத்தின் தென்பகுதியில் அமெரிக்க ரோந்துப் படையணி மீது நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் காயமடைந்தனர்.

இதேவேளை ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ் பீல்ட் - அமெரிக்க கடற்படை அதிகாரிகள் முன்னிலையில் உரையாற்றுகையில் - அமெரிக்காவினதும் அதன் நேசநாடுகளினதும் மனஉறுதியை கிளர்ச்சிவாதிகள் சோதிக்கின்றனர்.

அவர்களுக்குத் தெரியும் அமெரிக்கப்படையைத் தோற்கடிக்க முடியாதென்று. ஆனாலும் எம்மை வெல்லலாம் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

பின்னர் ரம்ஸ் பீல்ட் - தலைநகர் பாக்தாத்திற்குச் சென்று ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவியைச் சந்தித்து - அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தேர்தல்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதுடன் ஈராக் தொடர்ந்து ஜனநாயக வழியில் செல்வதற்கான சகல உதவிகளும் வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.



## உலக நோக்கு

# ஆப்கானில் நடைபெற்ற தேர்தலில் வாக்கெண்ணும் பணிகள் ஒத்திவைப்பு!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற தேர்தல் வாக்களிப்பில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வாக்கு எண்ணும் பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான விசாரணைக்காக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் காத்திருப்பதாக ஆப்கான் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் ஐரோப்பாவின் ஓ.எஸ்.சி.ஏ. என்ற அமைப்பு தேர்தல் கண்காணிப்புக்காக 230 வெளிநாட்டவர்களை ஆப்கானுக்கு அனுப்பிவைத்தது. தேர்தலின்போது சிலமுறைகேடுகள் இடம்பெற்றதாகவும் இவை கண்டிப்பாக விசாரிக்கப்பட வேண்டுமெனவும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் 18 வேட்பாளர்களில் 15 பேர் இந்தத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும், எனவே தேர்தலை மீள நடத்தமாறு கோருவது நியாயமற்றது எனவும், வெளியிடங்களில் இருந்து வந்து வாக்களித்த மக்களுக்கு இது பெரும் சுமையை ஏற்படுத்துமெனவும் அந்த நிறுவனத்தின் தூதுவர் றொபேட் பாரி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் 10 மில்லியன் மக்கள் வாக்களித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் பலர் பாகிஸ்தானிலும், ஈரானிலும் அகதிகளாக வாழ்பவர்கள்.

இந்தத் தேர்தல் வெளிநாடுகளின் அனுசரணையுடன் இடம்பெற்றதெனத் தெரிவித்துள்ள தலிபான்கள், தமது ஆயுதப் போராட்டம் தொடருமென அறிவித்துள்ளனர்.

# எகிப்திய ஹோட்டல் மீதான தாக்குதலுக்கு இஸ்லாமிய அமைப்பு கண்டனம் தெரிவிப்பு!



எகிப்தின் தாபா பகுதியிலுள்ள ஹோட்டல ஒன்றின்மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலை அல்-காமா அல்-இஸ்லாமிய என்ற இஸ்லாமிய அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தத் தாக்குதலானது எவ்விதத்திலும் மதரீதியான அடிப்படையைக் கொண்டிருக்கவில்லையெனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், தாபா பகுதியிலுள்ள ஹோட்டல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எமக்குக் கிடைத்த பெறுபேறு என்னவெனில் முஸ்லிம்கள் உயிரிழந்தமையாகும். அதனுடன் பெண்கள் மற்றும் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். இது இஸ்லாமிய சட்டத்துக்கு முரணானதாகும் எனவும் அது தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கான வெடிபொருட்களைக் கடத்தினார்கள் எனத் தெரிவித்து 12 சந்தேகநபர்களை எகிப்திய பொலிஸார் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டதாகவும் இவற்றில் 9 எகிப்தியர்களும் அடங்குவதாக எகிப்திய அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் டி.என்.ஏ.பரிசோதனையின்படி 11 இஸ்ரேலியர்களும், 6 எகிப்தியர்களும் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தப் பரிசோதனையின்படி காணாமற்போன இரண்டு இத்தாலிய நாட்டு கன்னியாஸ்திரிகளான ஜெசிக்கா மற்றும் சர்பீனா றினாயுடோ ஆகிய இருவரும் கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறப்புற நடந்தேறிய கலை இலக்கிய விழா

## ஆளுநர் விருதை குழந்தை ஏற்க மறுப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றுமாலை 4 மணியளவில் நல்லூர் கந்தன் ஆலயத்தின் முன்பாக விசேட வழிபாடுகளுடன் ஆரம்பமாகி தமிழ்த்தாயின் உருவப் படத்தைத் தாங்கிய ஊர்தி அணி வகுப்பு கீழைத்தேய பான்ட் வாத்திய இசையுடன் பாரம்பரியக் கலைகளான காவடி, கோலாட்டம், சிலம்பு, கம்பு போன்றவற்றுடன் யாழ்.இந்து மகளிர் கல்லூரி நோக்கிப் புறப்பட்டது. இந்த ஊர்வலத்தினை மக்கள் வரவேற்கும் முகமாக வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி பூரண கும்பங்கள் வைத்தனர்.

தமிழ் இலக்கிய விழா ஊர்வலம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியை வந்தடைந்ததும் பிரதம, சிறப்பு விருந்தினர்கள் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர். இந்த நிகழ்வைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கள் விளக்கை பிரதம விருந்தினர்கள் சிறப்பு விருந்தினர்கள் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு இலக்கியத்துறையில் சிறந்து விளங்கியவர்களுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் விருதுகள் மு.கனகசபை, பி.ஸ்ரனிஸ்லாஸ், அறியான் பொய்கை, கை. செல்லத்துரை, கே.எஸ்.சிவகுமாரன், இரா.சடாச்சர தேவி, எஸ்.எல்.எம்.வரணிபா ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். இந்நிகழ்வைத் தொடர்ந்து பேராசிரியர் கா.சிவத்தம்பியின் உரையும் அவரது சிறப்புக்கள் தாங்கிய ஒளி நாடா ஒன்றும் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் கல்விசார் உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவில் ஆளுநர் விருது வழங்குவதாக அறிவிக்கப்பட்ட குழந்தை ம.சண்முகலிங்கம் விருதைப் பெற மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்படையினர் விவகாரம்

# திருமலையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற்படையினரும் விடுவிக்கப்படாததை எதிர்த்து இன்று திருகோணமலையில் பூரண ஹர்த்தாலுக்கு வட, கிழக்கு சிங்கள அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இன்றைய தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதுடன் திருமலை கொழும்பு பிரதான வீதியை வழிமறித்து மறியற் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும், அத்துடன், திருமலையிலுள்ள பிறிமா மா ஆலையின் விநியோகம், சீமெந்து விநியோகம், மற்றும் ஓயில் விநியோகம் ஆகியவற்றையும் தடை செய்யும் வகையில் மறியற் போராட்டம் நடத்தப்படுமென இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இன்றைய வீதி மறிப்பு போராட்டத்திற்காக வெளியிடங்களில் இருந்து நான்கு பேருந்துகளில் மக்களைக் கொண்டுவந்து கந்தளாய் பன்சாலையொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன. (04, 10)

அனலைதீவுக் கடலில்

# டொல்பின் மீனைப் பிடித்த மீனவர் பொலிஸாரால் கைது!

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுக்கடற்பரப்பில் வைத்து 80 கிலோ எடையுள்ள டொல்பின் மீன் ஒன்று தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்தொழிலாளியால் பிடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த டொல்பின் அகப்பட்டதாக அந்தத் தொழிலாளி தெரிவித்தார்.

கடலில் மனிதர்களின் நண்பன் என்று வர்ணிக்கப்படும் இந்த வகை டொல்பினைப் பிடிப்பது சட்டப்படி குற்றமாகும். இதைப்பிடித்தவர் யாழ்.பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

## பிரதி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரவையில் மேலும் நான்கு அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

### இந்தியாவின்...

பாக விளக்கமளித்தார்.

இன்றைய தினம் அவர் - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, முன்னாள் பிரமர் வாஜ்பாய் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், முன்னாள் பிரதமர்களான ஐ.கே.குஜ்ரால், நரசிம்மராவ் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஸிற் ஆகியோரையும் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார்.

எதிர்கட்சித் தலைவரின் இந்திய விஜயம் இரு பகுதியினருக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கானதென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றைய தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் இந்தியத் தலைவர்களுடன் இலங்கை நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடினார். இவர் இந்தியாவின் பிரதி வெளியுறவு அமைச்சர் ராயோ இந்திரஜித்தையும் சந்தித்து இருநாட்டு உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக இந்திய தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஹெல்கிசன் கலந்துரையாடுவார் என நோர்வேத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தியாவில் இருந்து நோர்வே திரும்பும் விதார் ஹெல்கிசன் - நோர்வேப் பிரதமர், வெளியுறவு அமைச்சர் மற்றும் முக்கிய தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு இம்மாத இறுதியில் மீண்டும் கொழும்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல தரப்பினரையும் சந்தித்து பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆராய்ந்த பின்னர் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் நோர்வேத் தூதுவராலய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

### கருணா குழு...

சிங்களக் கிராமமான நாகஸ்தென்னவில் கருணா குழுவைச் சேர்ந்த சிலர் வீடொன்றில் தங்கியிருந்தனர்.

இவர்கள் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் விடுதலைப் புலிகளின் விசேட அணியினர் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டும் மேலும் 6 பேர் காயமடைந்துமுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் ரவிக்குமார் என அழைக்கப்படும் ஜுட், குணராஜா என அழைக்கப்படும் நாகேந்திரா என அடையாளம் காணப்பட்டிருப்பதாக இராணுவத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற நாகஸ்தென்ன பொலிஸார் காயமுற்ற நிலையில் இருந்த கருணா அணியினர் 6 பேரையும் வெலிக்கந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இவர்களை அங்கிருந்து பொலனறுவை வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற இராணுவத்தினர் காயமுற்றவர்களின் நிலை மோசமாக இருந்ததனால் அங்கிருந்து நேற்றுக்காலை கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர்.

இந்தச் சம்பவத்தில் எஸ்.தவராசா, கணபதிப்பிள்ளை ரவி, நல்லையா சிவராசா, கணபதிப்பிள்ளை சின்னராசா, ராசன், றோகட்சாரா, ஆகியோர் உள்ளிட்ட அறுவரே படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை கருணா அணியைச் சேர்ந்த மார்க்கன் குழுவினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இவர்களே அண்மையில் வெலிக்கந்தப் பகுதியில் இடம்பெற்ற இரு முஸ்லிகளின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களெனவும் மட்டு. அம்பாறை அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி குழுவினருடன் தங்கியிருந்த ஒருவரே இவர்கள் மீது கிரனைட் வீசித் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத்தப்பிச் சென்றதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

# வவுனியா கல்வியியற் கல்லூரி மூன்று வாரத்துக்கு மூடப்பட்டது!

(வவுனியா)

வவுனியா கல்வியியற் கல்லூரியில் பரவியுள்ள வயிற்றோட்ட நோயினை அடுத்து கல்லூரியை மூன்றுவார காலத்துக்கு மூடுமாறு வவுனியா சுகாதாரப் பகுதியினர் உத்தரவிட்டுள்ளனர்.

இங்கு கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களில் 60 பேர் வயிற்றோட்ட நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் பத்துப்பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் உள்ளதாகவும், அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வயிற்றோட்ட நோய் ஏனையவர்களுக்கும் பரவக்கூடாதென்ற நிலையில் கல்லூரி பகுதிக்குச் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையை மேற்கொண்டனர்.

சுமார் 300 பேருக்காவது இந்த நோய் பரவியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஏனைய ஆசிரிய மாணவர்களுக்கும் இந்த நோய்க்கான தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

கல்வியியற் கல்லூரிகளில் உள்ள கழிப்பறைகளில் தேங்கி நிற்கும் கழிவுகள் வெளியே கசிந்திருப்பதனாலேயே இந்தத் தொற்று நோய் பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினம் நடைபெறவுள்ள நிலையில் கல்வியியற் கல்லூரியில் தொற்றியுள்ள வயிற்றோட்ட நோயை அடுத்து ஆசிரிய மாணவர்கள் எவரும் இன்றைய இந்த நிகழ்வில் பங்கபற்றமாட்டார்கள் எனவும் தெரியவருகிறது. (…)

### ஆழ ஊடுருவும்...

இந்தப் படைப்பிரிவின் தேவையானது மிகவும் அத்தியாவசியமானது. இந்தப் படைப்பிரிவிலுள்ளவர்கள் தற்போதும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் படைப்பிரிவுக்கு விசேட அதிரடிப் படைப பிரிவிலிருந்தும் கொமோண்டோ படைப் பிரிவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டவர்களே இணைக்கப்பட்டனர். அத்துடன் இந்த இரண்டு படைப்பிரிவுக்கும் தற்போது ஆட்சேர்ப்பு இடம் பெற்றுவருகிறது.

இராணுவத்திற்கு தகவல்கள் வழங்கும் குடும்பங்கள் மற்றும் புலனாய்வுத்துறை குடும்பங்கள் என்பன இராணுவத்தால் கவனிக்கப்படவில்லையென்ற தகவலும் தவறானது.

விடுதலைப் புலிகள் - படையினரின் மனவுறுதியைக் குலைத்து, உளவியல் ரீதியான வெற்றியை அடைய முயற்சி செய்கின்றனர். ஆனால், எமது உறுதிமிக்க வீரர்கள் திறமையான தலைமைத்துவத்தின் கீழ் இந்த அழுத்தங்களைத் தகர்த்தெறிந்து தாய்நாட்டைப் பாதுகாப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

### சுவிஸ் வெளியுறவு...

கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் இன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கள் - விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்குமாறு வலியுறுத்தும் நோக்குடனேயே இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

### மேஜர் ஜெனரல்...

வருமானத்தை விட 19 லட்ச ரூபா பெறுமதியான சொத்தை சேர்த்துள்ளமை குறித்து ஆணைக் குழுவுக்கு முறையாக விளக்கம் வழங்கத் தவறியதாக ஆணைக் குழு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட இவரை 10 ஆயிரம் ரூபா பிணை மற்றும் பத்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

அத்துடன், மேஜர் ஜெனரல் விஜேசூரியவை வெளிநாடு செல்ல முடியாத வகையில் தடையுத்தரவொன்றும் பிறப்பித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கான கட்டளைத் தளபதியாக இருந்த இவர், பின்னர் வன்னி கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு, அண்மையில் இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மல்வத்தை...

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழர்கள் யுத்தத்தை விரும்பவில்லை. பேச்சுக்கள் மூலமே தீர்வு காண விரும்புகிறார்கள். விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி நிர்வாக கோரிக்கை தனி நாட்டுக்கு அடித்தளமல்ல. சமஷ்டி அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு காணப்படும் தீர்வே நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதை விளக்கியதோடு,

சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் வலியுறுத்தவேண்டியதன் அவசியம் குறித்தும் சுமங்கல தேரரின் கவனத்திற்கு கொண்டுவந்தோம்.

ஜனாதிபதியின் சமாதான …லிணக்க ஆலோசனை சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இடம் பெற மறுத்தமை குறித்து தனது கவலையை வணக்கத்துக்குரிய சிறி சுமங்கல தேரர் தெரிவித்தார்.

ஐ.தே.கவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இந்த ஆலோசனை சபையில் அங்கம் வகிக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை அஸ்கிரிய பீடாதிபதியுடன் இடம்பெறவிருந்த சந்திப்பு இறுதிநேரத்தில் இடம்பெறவில்லை.

இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளமை குறித்து அஸ்கிரிய பீடாதிபதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### நாகமுத்தர் ஐயாத்துரை

**(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர்)**

நெடுந்தீவு பத்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்தர் ஐயாத்துரை அவர்கள் 11.10.2004 அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, பேரின்பநாயகி, மலர்விழி (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், சிவகுமாரன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), உமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் கணபதிப்பிள்ளை, அமரர் முருகேஷ், சின்னம்மா, அமரர் சுப்பிரமணியம், கிறேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பகீரதன் (லண்டன்), திவாகரன், துளசிதரன், சங்கீதா, ருசிதா, வருணன், அருள்மொழி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சிவகுமாரன் (மருமகன்)
ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.